Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 38 • 10.04.2016

அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்...

தீபத்தின் பிரதான ஊடக அனுசரணையில்

யாழ்


வர்த்தக வளாகம் 2016

ஏப்ரல் 7ம் திகதி முதல் ஏப்ரல் 13ம் திகதி வரை

யாழ் நகர், ஸ்டான்லி வீதி,
வெலிங்டன் தியேட்டர் வளாகத்தில்



## புதுவருட சிறப்பிதழ்



ரணிலின் புதிய போர்வாள்

4




அழிக்கப்படும் ஆதிக்குடிகளின் வாழ்வு

7



இரும்புக்கோட்டை முரட்டு சிங்கங்கள்

20

# இன்னுமேன் தாமதம்?

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தின் கடைசிக்கட்டத்தில் விடுதலைப்புலிகள் மீளஅணிதிரள்கிறார்கள் என்ற பரபரப்பு ஏற்பட்டது. தமிழர் பகுதிகள் கிட்டத்தட்ட போர்க்கால நிலைக்கு உள்ளாக்கப்பட்டு, நீடித்த பரபரப்பு மூன்று உயிர்களின் மரணத்துடன் நிறைவடைந்தது. அப்பொழுது கைதான சிலர் இன்னும் சிறைகளில் இருக்கிறார்கள்.

புதிய ஆட்சியில் மீண்டும் இப்பொழுது பரபரப்பு தொற்றியுள்ளது. இப்பொழுது விடுதலைப்புலிகள் அணிதிரள்கிறார்கள் என்று மகிந்த தரப்புத்தான் ஆர்ப்பாட்டம் செய்கிறது. அரசு அதனை மறுக்கிறது. புலிகள் மீளுருவாக எந்த வாய்ப்புமில்லையென அரசும், பாதுகாப்பு தரப்பும் அடித்துச் சொல்கின்றன.

சாவகச்சேரியில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கி பற்றிய முழுமையான, உண்மையான தகவல்கள் வெளிவர இன்னும் சிறிது காலமாகலாம். அதுவரை ஊகங்கள்தான் உலாவப் போகின்றன.

இந்த சம்பவம் மகிந்த ராஜபக்சவின் காலத்தில் நடந்திருந்தால், புலிகள் மீளிணைகிறார்கள், முளையிலேயே கிள்ளிவிட்டோம் என்று பெருமெடுப்பில் பிரசாரம் செய்தே தென்னிலங்கையில் கணிசமான ஆதரவை அதிகரிக்க முயன்றிருப்பார்கள். மகிந்த ராஜபக்சவின் அரசியலிற்கு எப்பொழுதும் எதிரிகள் தேவையாக இருந்தது. ஒரு சமயத்தில் அது தமிழர்களாக இருந்தது. பின்னர், தமிழர்களின் அபிலாசைகளாக இருந்தது. தமிழர்களின் அபிலாசைகளிற்கு எதிராக செயற்பட்டபடி 'நான் உங்கள் வீட்டுப்பிள்ளை' என அவர் சென்ரிமென்றாக வசனங்கள் பேசிக்கொண்டு திரிந்தார்.

இனங்களிற்கிடையில் குரோத அரசியல் செய்யாமல், சக வாழ்வை கட்டியெழுப்ப தற்போதைய அரசு எத்தனிப்பதால் இப்படியான செய்திகள் அவர்களிற்கு நிச்சயம் அசௌகரியத்தையே கொடுக்கும். சாவகச்சேரியில் என்ன நடந்திருந்தாலும், அது தற்போதைய சூழலிற்கு பாதகமானதே. மகிந்த தரப்பிற்கு தற்போது அரசியல் செய்ய கிடைத்துள்ள ஒரேயொரு துரும்பு இதுதான்.

மகிந்த ராஜபக்ச தோல்வியடைந்ததற்கு பிரதான காரணம், அவரது இந்த அரசியல் போக்குத்தான். நாட்டின் சிறுபான்மை இனங்களை பகைத்து, அவர்களை பகடையாக வைத்து தொடர்ந்தும் ஆட்சி செய்ய முடியாதென்பதை மகிந்த தோல்வி சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துவிட்டது. அவர் செய்த அரசியல் தவறு சாதாரணமானதல்ல. இலகுவில் பிரயாச்சித்தம் செய்யவல்லதுமல்ல. அவரது சந்ததியாலும் கழுவ முடியாத கறை.

கழுவ முடியாத கறையை கழுவ முயன்று காலத்தை இழக்க விரும்பாமலேயே, செய்த தவறையே மீண்டும் மீண்டும் செய்ய முடிவு செய்துள்ளார். அடுத்து வரவுள்ள உள்ளூராட்சிமன்ற தேர்தலை தனது வழக்கமான அரசியல் பாதையாலேயே சென்று சந்திக்க முடியுமென மகிந்த நம்புகிறார். கிராமப்புற வாக்காளர்களை உசுப்பேற்றி கணிசமான உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றலாமென மகிந்த கணக்கு போடுகிறார். கடந்த ஜனாதிபதி, பொதுத் தேர்தல் முடிவுகளை கவனமாக பார்த்தால், மகிந்தவின் சூத்திரம் சரியாகும் ஆபத்தும் உள்ளது. ஜனாதிபதி தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் தோல்வியடைந்த அவரது அதே சூத்திரத்துடன் உள்ளூராட்சிமன்ற தேர்தலை சந்திக்க விரும்புகிறார். அது எப்படியான பெறுபேற்றை வழங்குமென்பதை பார்க்க சிறிது காலம் பொறுத்திருக்க வேண்டும்.

ஜனவரி 2015 மாற்றம் புதிய இலங்கையை உருவாக்குவதற்கான மக்களின் அங்கீகாரம். இந்த வாய்ப்பை புதிய அரசு முறையாக பயன்படுத்திக் கொள்ளாவிட்டால், குறுகிய பார்வை கொண்டவர்களின் கைகளிற்குள் மீண்டும் நாடு சென்றுவிடும். மகிந்த ராஜபக்சவின் வார்த்தைகளில் சொல்வதென்றால் இனவாதம், மதவாதம் பேசுபவர்கள் மீண்டும் ஆட்சிபீடமேறும் அபாயமுள்ளது. அந்த அபாயப்பட்டியலில் முன்வரிசையில் இருப்பவர் மகிந்த ராஜபக்சதான்.

இந்த சூத்திரம் சில சமயங்களில் மகிந்த ராஜபக்சவிற்கு ஏதாவது பலன்களை கொடுக்கலாம். எனினும், நாட்டிற்கு எதையும் வழங்கப்போவதில்லை. 2015 ஜனவரிக்கு முந்தைய நிலைமையைத்தான் தோற்றுவிக்கும். இலங்கைத்தீவு நிலங்களால் அல்லாமல் மனங்களால் பிளவுபட்டு நிற்கும் காலமது.


தமிழர்கள் தமது அபிலாசைகளை ஜனநாயக, அகிம்சை வழியில் சென்றடைய விரும்புகிறார்கள் என்பதை 2009 மே 18ம் திகதிக்கு பின்னர் போதும்போதுமென்ற அளவிற்கு வெளிப்படுத்திவிட்டார்கள். தற்கொலை அங்கிகளை கொண்டல்லாமல், ஜனநாயக வழிமுறைகளின் மூலம்தான் அபிலாசைகளை அடைய முயற்சிக்கிறார்கள். இது தென்னிலங்கை அரசியல்வாதிகளிற்கும் தெரியும். எனினும், ஆட்சிஆசை இனங்களிற்கிடையிலான பதற்றத்தை தோற்றுவிக்கவும் மகிந்த ராஜபக்சவை துணிய வைத்துள்ளது.

நல்லிணக்க, இனப்பிரச்சனை தீர்வு விவகாரங்களில் நீடிக்கும் தாமதம்தான் மகிந்த ராஜபக்சவிற்கான அரசியல் வெளியை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இந்த தாமதம் அரசுக்கான ஆபத்தாகவும் மாறிவிடலாம். தயக்கங்கள், தாமதங்களை உதறி அரசு விரைந்து செயற்பட வேண்டுமென்பதையே சமகாலம் உணர்த்துகிறது.

**தீபம்**
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633, 0214927561

தீஆசிரியர்பீடம் : editor@deepam.lk ☎ 0214927562
சந்தா : subs@deepam.lk ☎ 0768255566
விளம்பரம் : sales@deepam.lk ☎ 0768255567
செய்திகளுக்கு : news@deepamnews.com

# சொன்னார்கள்



**விக்கிரமபாகு கருணாரட்ன – தலைவர், நவ சமசமாஜகட்சி**

மகிந்த ராஜபக்சவிற்கு கொலை அச்சுறுத்தல் உள்ளதென்றால் கொமாண்டோ பாதுகாப்பு கொடுத்து அதனை தடுக்க முடியாது. கழுகுக்கண் பார்வை கொண்ட பொலிசாரே தேவை. அவர்கள்தான் தூரத்திலேயே குண்டுவருவதை கண்டு தடுப்பார்கள்.




**குமார் குணரட்ணத்தின் தாயார்**

எனது மூத்த மகனை இழந்ததை போலவே இரண்டாவது மகனையும் இழந்து விடுவேனோ என்று பயமாக உள்ளது. குடிவரவு சட்டத்தை மீறியதாக கைதான எனது மகனிற்கு குடியுரிமை வழங்குவதை பற்றி, வழக்கு விசாரணை முடிந்த பின் பேசுவதாக சொன்னார்கள். ஆனால் இப்பொழுது யாரும் அது பற்றி பேசுகிறார்கள் இல்லை. கேகாலையில் பிறந்து வளர்ந்த எனது மகனிற்கு இலங்கை குடியுரிமை வழங்குவதில் என்ன பிரச்சனையென்று தெரியவில்லை.



**சம்பிக்க ரணவக்க – அமைச்சர்**

தற்போது வறட்சி நிலவுவதால் நீரேந்து பகுதிகளில் நீர்மட்டம் குறைந்து மின்தட்டுப்பாடு நிலவுவதாக கூறப்படுகிறது. இதைவிட வறட்சியான காலம் முன்னர் வந்தது. அப்பொழுதெல்லாம் நீர்மட்டம் குறையவில்லை. நீர்மட்டத்தை குறைத்து மின்தட்டுப்பாட்டை ஏற்படுத்த சிலர் முயற்சிக்கின்றனர்.



**மேர்வின் சில்வா**

சுதந்திரக்கட்சி அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பிற்கு நான் தேவையில்லையென்றால் எனக்கும் அவை தேவையில்லை. சந்திரிக்காவின் அழைப்பை ஏற்று ஐக்கிய தேசியக்கட்சியை விட்டு, சுதந்திரக்கட்சிக்கு சென்றது பிழையென்பதை இப்பொழுது உணர்ந்து கொள்கிறேன். ரணிலுடனேயே தொடர்ந்து அரசியல் பயணத்தை செய்திருக்க வேண்டும்.



**சீமான் – நாம் தமிழர் கட்சி**

கறுப்பாய் இருப்பவர்கள் எல்லோரும் தமிழர்களா? எருமைமாடு கூடத்தான் கறுப்பாக இருக்கிறது. விஜயகாந்த் என்ன தமிழனா? விஜயகாந்திற்கு பதிலாக சுதந்திரப் போராட்ட தியாகி நல்லக்கண்ணுவை முதல்வர் வேட்பாளராக அறிவித்திருக்கலாம்.

# க்ளிக் பக்கம்

குடும்பச்சுமையுடன் போராடும் பெண்களின் ஒரு சிறு கிளிக்

**என்னைப்பற்றி:** நான் அகல்யா. ஊடகத்துறை மாணவி. படங்கள் எடுப்பதில் ஆர்வம்.



படப்பிடிப்பாளர்: அகல்யா

இடம்: அக்கரைப்பற்று



குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் editor@deepam.lk



**www.facebook.com/mynthan**

"ரொம்பவே ஏமாத்துறாங்க பாஸ்.. பச்சையா நம்ம காச பிடுங்கிறாங்கன்னு தெரியுது.. ஆனா ஒண்ணும் பண்ண முடியல..'

"25gb முடியுதுன்னு 45 gb வாங்கினா அதுவும் கரெக்ட்டா 25 gb முடியுற நாளே முடியுது.. இதுல 25 gb ஆக்களுக்கு இப்ப 50 gb குடுக்கிறாங்களாம்! சுத்த ஏமாத்து"

"பாவிக்காட்டிக்கும் டேட்டா முடியுது / பாவிச்ச மாதிரி காட்டுது... இல்லேனா சின்ன விசயத்துக்கும் அள்ளு கொள்ளையா டேட்டாவ முழுங்குற மாதிரி என்னமோ ட்ரிக் செஞ்சு வைச்சிருக்காங்க..!"



**www.facebook.com/kananswamy·**

தீவார் தீவார் எண்டியளே கண்டியடா தீவாரின் இம்மமறுமையத்த அடியை..! எனிமேலாது தீவானோட சேட்ட விடுவதை நிறுத்தி கொள்ளுக.! கிரிக்கெட்டில் மேற்கிந்தியதீவு அணி வெற்றி..!!



**www.facebook.com/boysrrocks**

நாய் கெட்டகேட்டுக்கு ஞாயிற்றுக்கிழமை லக்ஸ்பிறே கேட்டிச்சாம் #அடிங்



**www.facebook.com/rimazahamed**

"டேய் மண்டையா, சென்னைய தவிர உங்க தோணி வேற டீம்ல விளையாட மாட்டேன்னுட்டு இப்போ ஏதோ பூனாவுல விளையாட்றாராமே"

"அது எங்க நாட்டு உள் விவகாரம் அதுல தலையிட நீங்க யாரு?"

"ஓ... அப்போ ஈழத்தமிழர வச்சி அரசியலும் சூப்பர் சிங்கரும், சிங்களவன் தமிழ்நாட்டுல விளையாட கூடாதுன்னும் சொல்றது? ஸ்ரீ லங்கா மட்டும் உங்க சின்ன வீடா?"



**www.facebook.com/kiriyogainuvil**

இலங்கையில் பல பொது இடங்களில் காணப்படும் பதாகைகளில் சிங்களப்பெயரின் கீழ் தமிழில் அதை மொழிபெயர்த்திருப்பார்கள்.ஆனால் 90% எழுத்துப்பிழைகளுடன்தான் அவை காணப்படுகின்றன.

இதற்குக்காரணமாக இருப்பவர் அந்த நிர்வாகத்தில் இருக்கும் ஒரு தமிழராக இருப்பார்.

அவரின் அஜாக்கிரதை,கவனக்குறைவால்தான் இது நடந்திருக்கும்.

மொழிபெயர்த்துத்தரும்படிகோட்கும்போதும் முழுமையாக மொழிபெயர்க்கமாட்டார்.

"இங்க தமிழாக்கள் குறைவு,யார் வாசிக்கப்போறாங்கள் ?ரான்சிலேட் பண்ணுறது அலுப்புவேலை" இவை எல்லாம் ஒன்றாகச்சேர்ந்து காசநோய் மருத்துவமனை காசுநோய்மருந்துமனையாக மாறியிருக்கும்.

இங்கே பல்கலைக்கழகத்திலும் சிலவேளைகளில் சிறிய புத்தகம் ஒன்று தருவார்கள் சிங்களப்புத்தகம் 120 பக்கத்தில் இருக்கும் தமிழ்ப்புத்தின் பக்கங்களின் எண்ணிக்கை 50 ஆக இருக்கும்.


யாரை நொந்தும் பயனில்லை நம்மை நாமே நொந்துகொள்ளவேண்டியதுதான்.




தீபத்தின் சமூக ஊடகங்களில் கடந்த வாரம் அதிகம் பகிரப்பட்ட படம் இது.உள்ளூராட்சி தேர்தல்களை உடன் நடத்தக்கோரி அம்பகமுக பிரதேசசபையின் உறுப்பினர்கள் தலைகீழாக நின்று நடத்திய போராட்டம். இரண்டு காலில் நின்று கேட்டதை அரசாங்கம் செய்யாததால், தலைகீழாக நின்று கேட்பதாக இவர்கள் கூறியுள்ளனர்.





# ரணிலின் புதிய போர்வாள்

பிரஹலாத ஹேமந்த்

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடுகளை அமைக்கும் பணியில் புதிய சிக்கலை உண்டாக்கியிருக்கிறது மீள்குடியேற்ற அமைச்சின் 65 ஆயிரம் ரெடிமேற் வீட்டுத்திட்டம். இந்த வீடுகள் சூழலுக்கும் மக்களுடைய வாழ்க்கைக்கும் நமது பண்பாட்டுக்கும் பொருத்தமற்றவை என்கின்றனர் பொறியாளர்களும் துறைசார் வல்லுனர்களும். இந்த வீட்டுத்திட்டத்தை ஏற்க முடியாது. இது எங்களுக்குடைய மக்களுக்குப் பொருத்தமானதல்ல என்று சொல்கின்றனர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர். இந்த வீட்டுத்திட்டத்துக்கு எதிராகவே இது வேண்டாம் என்றே தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது வடக்கு மாகாணசபை.

ஆனால், கள நிலைமையே வேறு. நீங்கள் என்னதான் சொன்னாலும் நாங்கள் இந்தத்திட்டத்தை மாற்றப்போவதுமில்லை. கைவிடப்போவதுமில்லை என்கிறது மீள்குடியேற்ற அமைச்சு. இன்று 30.03.2016 காலை கிடைத்த தகவலின்படி மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் இந்தத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் மிகத்தீவிரமாகவும் உறுதியாகவும் இருக்கிறார் என்று தெரிகிறது. இதற்கான சகல ஆசீர்வாதங்களையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுவாமிநாதனுக்கு வழங்கியிருக்கிறார்.

இதுதான் நாங்கள் ஊன்றிக் கவனிக்க வேண்டிய விடயங்களின் தொடக்கப் புள்ளியாகும்.

இந்த வீட்டுத்திட்டத்தின் பாதிப்புகளைப் பற்றி ஊடகங்களும் துறைசார் நிபுணர்களும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் வடக்கு மாகாணசபையும் விடாப்பிடியாக மறுத்து வருகின்றன என்று ரணிலுக்கும் தெரியும். சுவாமிநாதனுக்கும் தெரியும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் தெரியும்.

மாதிரி வீட்டைப் பார்வையிடுவதற்காக மைத்திரிபால சிறிசேனா யாழ்ப்பாணம் வந்திருந்தபோது அவருக்கு முன்னிலையிலேயே இந்த வீட்டுத்திட்டம் பொருத்தமானதல்ல. இதை ஏற்க முடியாது என்று சுவாமிநாதனிடம் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் சொல்லியிருக்கிறார்.

இப்படியெல்லாம் இருந்தும் இதைப்பற்றி மீள்பரிசீலனை செய்யாமல் விடாப்பிடியாக இதை அமுல் படுத்தியே தீருவது என்று அரசாங்கம் விடாப்பிடியாக நிற்பது ஏன்?

அரசாங்கத்தின் இந்த விடாப்பிடியான பிடிவாதத்தின் பின்னாலிருக்கும் காரணங்களும் அரசியலும் குணவியல்பும் என்ன?

1. சம்மந்தப்பட்டவர்களுக்குக் கிடைக்கவுள்ள நிகர லாபம். அதாவது, இந்த வீட்டுத்திட்டத்தை சர்வதேச நிறுவனம் ஒன்றே நிர்மாணித்துக் கொடுக்கவுள்ளது. இது தனியார் நிறுவம் என்பதால் அது லாபத்தில் ஒரு பங்கினை சம்மந்தப்பட்டவர்களுக்குப் பகிர்ந்தளிக்கும்.
2. தாம் கொண்டுவந்த திட்டத்தை எப்படியும் நடைமுறைப்படுத்தியே தீருவது என்ற அதிகாரக்குணம்.
3. சிறுபான்மைச் சமூகங்களை பிற தேசிய இனங்களின் இருப்பையும் விருப்பையும் மனங்கொள்ளாத இயல்பு
4. தமிழ்த்தரப்பின் இயலா நிலை பற்றிய துணிவு

இது இந்த வீட்டுத்திட்டத்துக்கு மட்டுமான பிரச்சினையல்ல. இதுதான் இலங்கையின் அரசியலாகும். வலுவான எதிர்த்தரப்பு ஆட்சியிலிருந்தாலும் சரி, இணக்கமாக நட்பும் நல்லுறவுமாக இருக்கும் நல்லாட்சியாக இருந்தாலும் சரி, அவர்கள் தங்களுடைய நிகழ்ச்சி நிரலின்படியே இயங்குவர். தங்கள் சிந்தனைக்கே முதல் வடிவமும் செயல் வடிவமும் கொடுப்பர். இதில் ரணிலென்றும் மைத்திரி என்றும் மகிந்த என்றும் சந்திரிகா என்றும் வேறுபாடுகள் கிடையாது.

இப்பொழுது ஆட்சியிலிருக்கும் கூட்டரசாங்கம் மேற்கின் அனுசரணையைப் பெற்றது. மேற்கின் அனுசரணை என்பது கிட்டத்தட்ட சர்வதேச சமூகத்தின் அனுசரணையும் ஆதரவும்தான். அவர்கள் விரும்பினால் எதையும் ஆக்கலாம் அல்லது அழிக்கலாம். எதையும் ஊதிப்பெருப்பித்துக் காட்டவும் உருவே தெரியாமல் மறைக்கவும் கூடிய ஊடக வல்லமையும் மேற்கிற்கு உண்டு.

இந்தப்பலத்தைப்பெற்றிருக்கிறது இன்றைய அரசாங்கம். ஆகவே ரணில் மிகப்பலமான நிலையிலேயே இப்பொழுதிருக்கிறார். ரணில் மற்றும் மைத்திரி தரப்பினர் ஆட்சியைப் பிடிப்பதற்கு சிறுபான்மைச் சமூகங்களின் அல்லது பிற தேசிய இனங்களின் வாக்குகளும் ஆதரவும் தேவையாக இருந்தது உண்மை. ஆனால், ஆட்சியைத் தக்க வைப்பதற்கு மேற்கின் தயவும் ஆதரவுமே அவர்களுக்குத் தேவை. மேற்குக்கும் இவர்கள் தேவை. எனவே இந்த இருதரப்பு நலன்களின் அடிப்படையில் வகுக்கப்பட்ட திட்டங்களின் படியே நடவடிக்கைகள் அமைகின்றன.

இந்த நிலையில்தான் கொழும்பு அரசியல் நகர்ந்து கொண்டிருக்கிறது.

இத்தகைய பலமான நிலையில் இருக்கும் அரசாங்கம் வீட்டுத்திட்டத்தை மட்டுமல்ல, ஏனைய விடயங்களில் கூட எந்தவிதமான அடிப்படை மாற்றங்களையும் செய்யத் தயாரில்லை.

அரசியல் கைதிகளின் விடுதலை, போர்க்குற்ற விசாரணை, படைவிலக்கல், காணாமற்போனோர் தொடர்பான விவகாரம், அரசியல் தீர்வு, போரினால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணம் மற்றும் மறுவாழ்வு என எதிலும் அது மாறாக்கொள்கையையே பின்பற்றுகிறது.

இந்த இறுகிய நிலையை நெகிழ வைக்கக்கூடிய மென் அழுத்தங்களைக் கூட வெளிச்சக்திகள் இலங்கை அரசாங்கத்துக்குக் கொடுக்கவில்லை. அவை அப்படிக்கொடுக்கப் போவதுமில்லை. ஏனென்றால், இது அவர்களுடைய அரசாங்கம். ஆகவே தங்களுடைய அரசாங்கத்துக்கு விருப்பக்குறைவான எந்த விடயங்களையும் அவர்கள் செய்யப் போவதில்லை.

அரசியல் கைதிகளின் விடுதலை, போர்க்குற்ற விசாரணை, படைவிலக்கல், காணாமற்போனோர் தொடர்பான விவகாரம், அரசியல் தீர்வு, போரினால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணம் மற்றும் மறுவாழ்வு எனத் தொடரும் தமிழ் மக்களின் துயரங்களைப்பற்றிய கவலைகளைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து வெளிப்படுத்தி வருகிறது. வேளிநாட்டுப் பிரதானிகளுக்கு ஒரு வாய்பாடு போலவே இந்த விவகாரங்களைத் தலைவர் சம்பந்தனும் அவருடைய அணியினரும் சொல்லி வருகிறார்கள். ஆனால், கேளாச்செவியர்களாக அல்லது மாறா மனதுடையோராகவே வெளியுலகம் உள்ளது.

‘எங்களுடைய மக்களின் பிரச்சினைகளைப் பற்றிச் சொன்னால், முன்னர் மெல்லிய சலசலப்பையாவது காட்டுவார்கள். இப்பொ





அரசியல் கைதிகளின் விடுதலை, போர்க்குற்ற விசாரணை, படைவிலக்கல், காணாமற்போனோர் தொடர்பான விவகாரம், அரசியல் தீர்வு, போரினால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணம் மற்றும் மறுவாழ்வு என எதிலும் இந்த அரசாங்கம் மாறாக் கொள்கையையே பின்பற்றுகிறது.

ழுது நாங்கள் பிரச்சினைகளைப்பற்றிப் பேசத்தொடங்கினால் முகம் வாடிவிடுகிறார்கள். பேச்சை வேறு திசையில் திருப்பப் பார்க்கிறார்கள்' என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உயர்நிலை முக்கியஸ்தர் ஒருவர் கவலையோடு சொல்கிறார்.

தமிழ்த்தரப்புச் சற்று விடாப்பிடியாக இருந்த காரணத்தினாலும் தமிழ் மக்கள் வழங்கிய ஆதரவுக்கு நன்றிக்கடன்போலவும் சம்பூர் மற்றும் வலி வடக்கு பிரதேசங்களில் சில இடங்களிலிருந்து படையினர் விலக்கப்பட்டுள்ளனர். அத்துடன் சில மாதங்களுக்கு முன் தமிழ்த்தரப்பின் கடுமையான அழுத்தம் காரணமாக ஒரு சிறிய தொகுதி கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

இதற்கப்பால் குறிப்பிடத்தக்க அளவுக்குப் பெரிய மாற்றங்கள் எதையும் அரசாங்கம் செய்யவில்லை. அதைப்பற்றிய அக்கறைகளையும் அது காண்பிக்கவில்லை. அதாவது, நல்லாட்சி என்பதைத் தமிழர்கள் உணரக்கூடியவகையில் எதுவும் நடந்து விடவில்லை.

ரணில் மைத்திரியைப் பொறுத்தவரையில் தங்களுக்குள்ள பிரதான நெருக்கடிகளை எப்படித் தணிப்பது, எப்படி அவற்றை முறியடிப்பது என்பதிலேயே கவனமாக உள்ளனர். அதாவது தங்களுக்கு நேரடிச் சவாலாக இருப்பது எதிர்க்கட்சிகளின் கூட்டணி மற்றும் ஜே.வி.பியின் எதிர்நடவடிக்கைகளாகும். முக்கியமாக மகிந்த தரப்பின் சவால்களாகும். ஆகவே அந்தச் சவாலை முறியடிக்கும் வகையிலேயே அவர்களுடைய முதன்மை வேலைத்திட்டங்களும் நிகழ்ச்சி நிரலும் உள்ளன. மேற்குலகத்துக்கும் இதுதான் முக்கியமானது.

அரசாங்கத்துக்குச் சவாலாக உள்ள எதிரணியை முடக்கிச் சிதைப்பதே மேற்குகத்தின் நோக்கமுமாகும். எதிரணி எழுச்சியடைந்தால் மறுபடியும் மேற்குலகத்துக்கு எதிரான சீனாவுக்கு ஆதரவான ஒரு நிலை உருவாகி விடும் அல்லவா.

தமிழ்த்தரப்பைப்பொறுத்து மேற்குலகத்துக்கு எந்தவிதமான அச்சமும் கவலையும் கிடையாது. தான் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேறாது விட்டாலும் ஒருபோதும் தமிழ்த்தரப்பு எதிராகச் செல்லாது என்று அதற்கு நன்றாகத் தெரியும். அரசாங்கம் எதையும் செய்யாது விட்டாலும் அதற்கெதிராகத் தமிழ்த்தரப்பு கிளர்ந்தெழவோ போராடவோ மாட்டாது என்பதும் தெரியும். ஆகவே அதற்குச் சவாலானது தென்னிலங்கையின் எதிர்த்தரப்புகளே.

இப்பொழுது ராஜபக்ஸக்களை முடக்குவதற்கான வியூகத்தை அரசாங்கம் திறமையாக வகுத்துச் செயற்பட்டாலும் எதிரணியின் அச்சம் முற்றாகத் தீர்ந்து விடவில்லை.

எனவேதான் சரத் பொன்சேகாவை களமிறக்கியிருக்கிறார் ரணில். ராஜபக்ஸக்களுக்கு எதிராகச் சிந்திக்கக் கூடிய, போரிடக் கூடிய முன்னணிப் படைவீரராக சரத்தை அடையாளம் கண்டிருக்கிறார் ரணில். இதற்காக ரணில் வகுத்த வியூகத்தின்படி சரத் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். பதவியேற்ற கையோடு அதிரடி அறிவிப்புகளைச்செய்து எல்லோருடைய கவனத்தையும் தன் பக்கம்திருப்பிய சரத், ராஜபக்ஸக்களுக்கும் எதிரணிக்கும் எதிராகப் போர் முனையைத் திறந்திருக்கிறார். போதாக்குறைக்கு பகிரங்கப் போர்ப்பிரகடனத்தையும் செய்திருக்கிறார்.

போரில் படைத்தளபதியாக இருந்து களமாடி மகிந்தவுக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தவர் பொன்சேகா. இப்பொழுது ரணிலுக்காக அரசியல்வாதியாக இருந்து களமாடவுள்ளார்.

ரணில் வகுத்துள்ள வியூகத்தின்படி சரத் சிங்களத்தரப்புக்கும் பதிலளிக்கக்கூடியவர். கூடவே தமிழ்த்தரப்பின் விவகாரங்களிலும் சமாளிக்கக் கூடியவர். அப்படி இரண்டு பக்கமும் கூருள்ள ஒரு வாளையே ரணில் எதிர்பார்த்தார்.

ரணில் எதிர்பார்த்தபடி சரத்திற்கு தமிழ், சிங்களம் என்ற இரண்டு தரப்பிலும் கவனம் ஏற்பட்டுள்ளது. அவருடைய அதிரடி அறிவிப்புகளை தமிழர்களும் விரும்புகிறார்கள். சிங்களவர்களும் விரும்புகிறார்கள். சரத்தின் செய்திகளுக்குக் கிடைத்து வரும் அண்மைய ஊடகச் செல்வாக்கிலிருந்து இதைப் புரிந்து கொள்ளலாம்.

ஆகவே தென்னிலங்கை அரசியலுக்கே அரசாங்கம் முதன்மையளிக்கிறது. அதற்குத்தான் வெளியுலகத்தின் கவனமும் உண்டு. தமிழ்த்தரப்பைப்பற்றி யாருக்கும் கவலை இல்லை. ஆகவே மீண்டும் தமிழர்கள் முடிவற்ற காத்திருப்பிற்குள்ளும் பதிலற்ற எதிர்பார்ப்புக்குள்ளும் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

விடாப்பிடியான சிங்களத்தலைமைகளும் கைவிட்டு விட்ட சர்வதேச சமூகமும் இனி என்ன செய்யப்போகின்றன என்று எதிர்ப்பார்ப்பதைத் தவிர வேறில்லை என்ற அளவில்தான் தமிழர்களுடைய அரசியல் உள்ளது.

இதற்கெல்லாம் வழியாக மாற்றுப்பொறிமுறையைப் பற்றிச் சிந்திக்க வேண்டியதே இன்றைய தேவை. அதற்குப் புதிதாகச் சிந்திக்கின்ற அரசியலை வினைத்திறன் மிக்கதாகச் செயற்படுத்தக் கூடிய ஆளுமைகளும் அர்ப்பணிப்பாளர்களுமே தேவை. காலம் எப்பொழுதும் தேவைகளுக்கான உற்பத்திகளைச் செய்யும். அந்தக் காலம் உருவாகி வரும். அதுவே புதியதை அளிக்கும்.



> ரணில் வகுத்துள்ள வியூகத்தின்படி சரத் சிங்களத்தரப்புக்கும் பதிலளிக்கக்கூடியவர். கூடவே தமிழ்த்தரப்பின் விவகாரங்களிலும் சமாளிக்கக் கூடியவர். அப்படி இரண்டு பக்கமும் கூருள்ள ஒரு வாளையே ரணில் எதிர்பார்த்தார். எதிர்பார்த்தபடி சரத்திற்கு தமிழ், சிங்களம் என்ற இரண்டு தரப்பிலும் கவனம் ஏற்பட்டுள்ளது.





யாழ்.பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தின் ஏற்பாட்டில் பிறவுண் வீதியில் அமைந்துள்ள 'சுகதாமம்' மண்டபத்தில் அண்மையில் பொதுமக்களுக்கான 'ஆத்மபலம்' என்ற தியான நிகழ்ச்சி நடந்தது. அதில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும், மனவலிமை சார்ந்த புத்தகங்களை மக்கள் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.



# மகளிற்காக அவமானங்களை சந்திக்கிறேன்

## வித்தியாவின் தாயார் கண்ணீர் பேட்டி!

வ.நரேஜி

புங்குடுதீவு மாணவி வித்தியா கொல்லப்பட்ட அதிர்ச்சியும், கொதிப்பும் இன்னும் மறையவில்லை. அதற்குள் ஒருவருடம் ஓடிக்கடக்கவுள்ளது. வரும் மே மாதம் 13ம் திகதியுடன் வித்தியா கொல்லப்பட்டு ஒரு வருடமாகிறது.

வடக்கு கிழக்கையே கொதிக்க வைத்த வித்தியா விவகாரம் இப்பொழுது மெதுமெதுவாக அடங்கிச் செல்கிறது. வித்தியாவிற்கான எழுச்சியில் வலியுறுத்தப்பட்ட பிரதான கோரிக்கை கொலையாளிகளை அடையாளம் காணுங்கள், அவர்களிற்கு தண்டனை வழங்குங்கள் என்பது. ஒரு வருடம் நெருங்கும் நிலையில் நிலவரங்கள் எப்படியிருக்கிறது?

புங்குடுதீவில் வித்தியா குடும்பம் வசிக்க முடியாத நிலையேற்பட்டது ஏன்?

இப்படி பல விடயங்களையும் தீபத்துடன் பேசியிருக்கிறார் வித்தியாவின் தாயார் சி.சரஸ்வதி. அவருடனான விரிவான நேர்காணல் இது.

**கேள்வி: வித்யா கொல்லப்பட்டு ஒரு வருடமாகப் போகிறது. வழக்கு விவகாரங்கள் என்ன நிலையில் இருக்கின்றன?**

**பதில்:** வரும் மாதம் 13 ஆம் திகதி எனது மகள் வித்தியா மரணமாகி ஒரு வருடமாகிறது. ஆனால் வழக்கு விசாரணைகள்தான் இன்னும் முடிந்தபாடில்லை. ஆரம்பத்தில் வழக்கில் பொலிசார் அக்கறையற்றவர்களாக தான் இருந்தார்கள். நான் முறையிடச் சென்ற போது கூட அதை ஏற்கின்ற பக்குவம் பொலிசாரிடம் இருக்கவில்லை. ஆனால் பின்னர் சீஐடியிடம் வழக்கு ஒப்படைக்கப்பட்டது. பொலிசாரின் செயற்பாட்டால் நம்பிக்கை இழந்திருந்தோம். ஆனால் சீஐடி தீவிரமாக விசாரித்து எனது மகளின் கண்ணாடியை 10 நாட்களுக்கு பின் கண்டு பிடித்தார்கள். இவர்கள் நீதியைப் பெற்றுத் தருவார்கள் என நம்பி இருக்கிறோம். இந்த சம்பவத்துடன் பலர் தொடர்புபட்டுள்ளனர். இது வரை 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது திட்டமிட்டு செய்யப்பட்ட ஒரு செயற்பாடு.



> நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு செல்கின்ற போது கைது செயப்பட்டவர்களின் உறவினர்கள் என்னைக் தகாத வார்த்தைகளை பயன்படுத்தி தாறுமாறாகப் பேசுகிறார்கள். பொலிசாருக்கு முன்பாக கூட இந்தச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. நாம் பொறுமையாகதான் இருக்கின்றோம்.

இந்த வழக்கை மேல் நீதிமன்றில் ஒப்படைக்கப் போகிறார்கள். அங்கு மாதம் இரு தவணை வழக்கு இடம்பெறும் என கூறப்படுகிறது. எனவே விரைவாக இந்த வழக்குக்கு தீர்வு கிடைக்கும் என நம்புகிறேன். அதுதான் எனது விருப்பமும் கூட.


**கேள்வி: வித்தியா கொல்லப்பட்டபின் ஜனாதிபதி உங்களை சந்தித்திருந்தார். வேறு யாரெல்லாம் சந்தித்திருந்தார்கள்? என்ன வாக்குறுதிகள் வழக்கினார்கள்? அவற்றில் எது நிறைவேறியது?**

**பதில்:** நான் யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தபோது குற்றவாளிகளுக்கு விரைவாக தண்டனை வழங்க வேண்டும் என கோரினேன். அவர் விசேட நீதிமன்றம் அமைத்து விசாரணை செய்வதாக கூறியிருந்தார். ஆனால் ஏனோ தெரியவில்லை அவ்வாறு நடக்கவில்லை.

அதன்பின் கடந்த மார்ச் 8 ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பொலிஸ் மா அதிபர் உள்ளிட்டோரை கொழும்பில் சந்தித்தேன். அவர்களிடமும் குற்றவாளிகளுக்கு விரைவாக தண்டனை வழங்குமாறு கோரினேன். அவர்களும் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படும் என உறுதியளித்தனர். ஒரு வருடம் கடந்தாலும் இந்த வழக்கை கொண்டு நடத்த விசேட ஏற்பாடுகளை சட்டமா அதிபர் திணைக்களம் ஊடாக செய்வதாக பிரதமர் தெரிவித்திருந்தார். இந்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள். அப்போது தான் எனது மகளின் ஆத்மா சாந்தியடையும்.

**கேள்வி: ஜனாதிபதியை சந்தித்தபோது உங்கள் குடும்பத்திற்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளதாக கூறியிருந்தீர்கள். எப்படியான அச்சுறுத்தல் புங்குடுதீவில் இருந்தது?**

**பதில்:** இந்த வழக்கில் கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் மத்தியில் வாழ முடியாத நிலை ஏற்பட்டது. மகள் இறந்த போது அடைந்த வேதனையை விட இந்த ஒரு வருடத்திற்குள் மற்றவர்களின் கதைகளாலும், ஊடகங்களின் சில செயற்பாட்டாலும் நாம் அடைந்த வேதனைகள் அதிகம். இன்றும் கூட நான் பஸ்சில் செல்கின்ற போது, அல்லது நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு செல்கின்ற போது கைது செயப்பட்டவர்களின் உறவினர்கள் என்னைக் காண்கின்ற போது தகாத வார்த்தைகளை பயன்படுத்தி தாறுமாறாக பேசுகிறார்கள். கண்டபடி எதைஎதையோ சொல்கிறார்கள். பொலிசாருக்கு முன்பாக கூட இந்தச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. நாம் பொறுமையாகதான் இருக்கின்றோம். எனது மகளுக்கு நீதி வேண்டும் என்பதற்காக இந்த அவமானங்களை சந்திக்கின்றேன். கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் தலைநிமிர்ந்து நடக்கிறார்கள். பிள்ளையை பறி கொடுத்த நாம் தலைகுனித்து நடக்க வேண்டியுள்ளது. ஆகவே, இந்த நிலையில் புங்குடுதீவில் தொடர்ச்சியாக வாழ முடியும் என நான் நினைக்கவில்லை. புங்குடுதீவில் நடமாடும் ஒவ்வொரு நிமிடமும் மகளின் ஞாபகங்களே வந்து செல்கின்றன. அவள் தடம் பட்ட இடங்களை என்னால் தனிமையில் கடந்து செல்ல முடியவில்லை.



**கேள்வி: இப்பொழுது வவுனியாவில் உங்களிற்கு வீடு தரப்படுவிட்டது. இனி வவுனியாவில் இருக்கப் போகிறீர்களா? புங்குடுதீவில் இருக்கப் போகிறீர்களா?**

**பதில்:** தற்போது இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் வவுனியாவில் வீடு தரப்பட்டுள்ளது. காணி அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது. வழக்கு விசாரணைகள் மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்படவுள்ளதால் மாதம் இரு முறை வழக்கு வரும். அடிக்கடி நீதிமன்றம் செல்ல வேண்டி வரும். இப்பொழுது கூட பொலிசார் சில வேளைகளில் விசாரணைக்காக வருகிறார்கள். புங்குடுதீவில் இருந்தால்தான் வழக்கை விரைவு படுத்த முடியம். அதனால் வழக்கு முடிந்த பின் வவுனியாவில் வந்து குடியிருக்கலாம் என நினைகின்றேன். மகளின் ஓராண்டு கூட் புங்குடுதீவிலேயே செய்ய வேண்டும்.

**கேள்வி: வித்யா இல்லாத ஒருவருடத்தை எப்படி உணர்கிறீர்கள்?**

**பதில்:** அதனை வார்த்தைகளால் சொல்ல முடியாது. அவள் இல்லாததால் எனது கணவருக்கும் உடல்நிலை மோசமாகிவிட்டது. அவள் தான் அவரை பார்கிறவள். தந்தை மேல் நல்ல பாசமாக இருந்தவள். தற்போது அவள் இல்லாத உலகத்தை அவரால் ஏற்க முடியாமல் இருக்கிறது. வீட்டில் சமையல் என்றால் கூட என்னோடு கூட இருந்து செய்வாள். ஆனால் இன்று எனது செல்லம் இல்லாமல் நான் படுகின்ற துன்பத்தை யாரிடம் சொல்ல. எனது மகளுக்கு நீதி வேண்டும். எனக்கு வித்தியா வேண்டும். வித்தியா.... வித்தியா.. ( கண்ணீர்விட்டு அழுகிறார்)








# அழிக்கப்படும் ஆதிப்பழங்குடியினர் வாழ்வு

சம்பூரில் அமைக்க திட்டமிடப்படும் அனல்மின் நிலையத்திற்கு எதிராக பரவலான போராட்டங்கள் வெடிக்கத் தொடங்கி விட்டன. உலகமே அனல்மின் நிலையங்களை கைவிட தொடங்கிவிட்ட காலத்தில், இலங்கை புதிதாக அனல்மின் நிலையங்களை நிறுவ முயல்வதுதான் புரிந்து கொள்ள முடியாததாக உள்ளது. இலங்கை போன்ற சிறிய நாடுகளில் அனல் மின் நிலையங்கள் இல்லாமலே மின்சார முகாமைத்துவத்தை சிறப்பாக செய்யலாமென்ற போதும், அனல்மின் நிலையம் அமைப்பதில் அரசு உறுதியாக உள்ளது.

அனல்மின் நிலையம் அமைவதால் ஏற்படப்போகும் சூழல் கேடு, மனிதப் பாதிப்புக்கள் பற்றி இதில் பேசவில்லை. அது தனித்துப் பேசவேண்டிய பெரிய பிரச்சனை. அனல்மின் நிலையத்திற்காக சுவீகரிக்கப்படும் காணிகளினால் சொந்த நிலங்களை இழப்பவர்களின் துயரக்கதையொன்றே இது.

சொந்த நிலத்திலிருந்து விரட்டப்படுவது தான் மனிதர்களின் ஆகப்பெரிய பிரச்சனை. சொந்தநிலத்துடனான ஆத்மார்த்தபிணைப்பு, நிலத்தை மையப்படுத்தி கட்டியமைக்கப்பட்ட வாழ்வு என மனிதர்களுக்கும் சொந்த நிலத்துக்குமான பிணைப்பு அறுக்க முடியாதது. எல்லா மனிதர்களிற்குமே இது பொருந்துமென்றபோதும், ஆதிக்குடிகளிற்கே இது கச்சிதமாக பொருந்தும். நிலத்துடன் பிணைந்த வாழ்வை கைவிடாமல் இன்றும் தொடரும் இனக்குழுமம் அவர்கள். வேட்டை, தேன் சேகரித்தல், விறகு எடுத்தல் என இயற்கையுடன் பிணைந்த காட்டோர கிராம வாழ்க்கைதான் இலங்கையின் எல்லா ஆதிக்குடிகளின் வாழ்வும். அப்படியான கிராமமொன்றிற்கு இடிவிழுந்த கதையிது.

சந்தோசபுரம் மூதூர் கிழக்கின் பழங்குடியினர் வாழும் கிராமங்களில் ஒன்று. சாலையுர் (ரோட்டுச்சேனை) என அழைக்கப்பட்ட கட்டைபறிச்சான் பாலத்திற்கு அண்மையில் அமைந்திருந்த கிராமம் 1985 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்தது. இரண்டு கிலோமீற்றர்களிற்கு அப்பாலிருந்த கிறவல்குழி என்ற இடத்தில் குடியேறியது.

2002இல் அரசுக்கும் புலிகளிற்குமிடையில் ஏற்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் அந்த மக்களின் வாழ்வில் மீண்டும் நம்பிக்கையை ஏற்படுத்தியது. அவர்கள் சொந்த நிலங்களிற்கு திரும்பினார்கள். அப்போது வீடமைப்பு அமைச்சராக இருந்த ஆறுமுகன் தொண்டமானினால் அந்தக்கிராமத்திற்கு நூறு வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டன.

இயற்கையுடன் இணைந்திருந்த அந்தக்கிராமத்திற்கு மீண்டும் 2004 ஏப்ரலில் இடப்பெயர்வு வந்தது. தமது வாழ்வையே புரட்டிப் போடும் நிரந்தர பேரிடி என்பதை அறியாமல் அந்த மக்கள் ஓடினார்கள். சம்பூர், கட்டைப்பறிச்சான், சேனையூர், கடற்கரைச்சேனை, சுனித்தீவு என மூதூர் கிழக்கின் 17 கிராமங்கள் சந்தித்த பெரிய இடப்பெயர்வை சந்தோசபுரமும் சந்தித்தது.

விறகும் தேனும் வேட்டையும் காட்டு இலைக்கறிகளும் காட்டுப் பழங்களும் என கழிந்த இந்த மக்கள் அதன் பின்னர் நீண்ட முகாம் வாழ்வில் அலைக்கழிந்தனர். தமது சொந்த நிலங்களிற்கு இனி திரும்பவே மாட்டார்கள் என்ற நிலையிலிருந்த சமயத்தில் அதிசயாக நடந்த ஆட்சிமாற்றம் சம்பூர் நிலங்களை விடுவித்தது.

மீள்குடியேற்றத்திற்கு சென்ற மக்களிற்கு பேரதிர்ச்சி காத்திருந்தது. பாதிக்கிராமத்தை உள்ளடக்கி உயர்பாதுகாப்பு வலய முள்வேலி சென்றது.

சம்பூர் மக்களின் நிலங்கள் உயர்பாதுகாப்பு வலயங்களாக்கப்பட்ட போது அவர்கள் நீதிமன்ற படியேறும் நிலையிருந்தது. ஆனால் பொருளாதார பலமற்ற, கல்வியில் பின்தங்கிய ஆதிக்குடிகளான சந்தோசபுரம் மக்களிற்கு நீதிமன்றம் செல்லும் வழியை யாரும் காண்பிக்கவுமில்லை, அவர்களிற்காக நீதிமன்றத்தின் படியில் யாரும் ஏறவுமில்லை.

சந்தோசபுரம் பாதியாகத்தான் கையளிக்கப்பட்டது. பாதிக்கிராமத்தை ஏற்பதா அல்லது மொத்தமாக எதிர்த்து போராடுவதா என்ற இரண்டு தெரிவிருந்த போது, சந்தோசபுரம் மக்கள் பாதிக்கிராமத்தையே ஏற்றுக்கொண்டனர்.

அனல்மின் நிலையத்தால் வெறும் ஏழு குடும்பங்கள்தான் காணிகளை இழக்கிறார்கள் என அரசியல்வாதிகள் கூறினாலும் உண்மையென்னவோ மாறாகத்தான் இருக்கிறது.

பழங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை சுவீகரிக்கப்பட்ட 'பாதிக்கிராமம்' பாதிக்கப் போகிறது. காட்டு வாழ்க்கை அவர்களிற்கு கனவாகவே முடியப் போகிறது. நிலங்களிலிருந்து பிரித்தால் அவர்களின் வாழ்க்கை நிர்மூலமாகிவிடும். வேட்டை, தேன் சேகரித்தல் முதலான பாரம்பரிய வாழ்க்கை முறைகளை கொண்ட மக்கள் கூட்டத்தின் வாழ்வாதாரங்களை திடீரென இல்லாமல் செய்வதுகூட ஒரு இனவழிப்புத்தான். அவர்களை மாற்று தொழிலிற்கு பழக்கப்படுத்தி, புதிய வாழ்வை கட்டியமைத்த பின்னரே அவர்களின் வாழ்வாதார நிலங்களிலிருந்து பிரிக்க வேண்டும்.

அனல்மின் நிலையத்தை அமைத்து தங்களை கொல்ல வெண்டாமென வலியுறுத்தி கடந்த வாரம் ஆதிப்பழங்குடி மக்கள் ஒரு ஆர்ப்பாட்ட போராட்டத்திலும் ஈடுபட்டனர். ஆனால் இது அதிகாரத்தில் உள்ளவர்கள் காதுகளை எட்டுமா?





55 வருட சேவையில் உலக புகழ் பூத்த
சர்வதேச புலவர்
திருமண சேவை
இயக்குனர் : புலவர் செ. து. தெட்சணாமூர்த்தி
மதுரகானம்
238, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். / 021 222 7147, 071 335 2215
57, விகாரை லேன், வெள்ளவத்தை, கொழும்பு 06. / 011 236 3435, 077 631 3991
26, சிவன் வீதி, திருகோணமலை. / 026 222 5641, 077 089 8963
432, திருநகர் மெயின் வீதி, கிளிநொச்சி. / 077 633 4003, 077 396 6610
புதிய வீட்டுத்திட்டம், சாவற்காடு, மன்னார். / 077 507 1772
07, டயஸ் வீதி, மட்டக்களப்பு. / 065 492 9927

அன்பர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
EG எவகிறீன் அச்சகம்
EVERGREEN PRINTERS
(Offset Printers, Publishers & Book Binders)
# 693, K.K.S Road, Jaffna. Tel: 021 2219893 E-mail : evergreenjaffna@gmail.com
185A, Trinco Road, Batticaloa. Tel: 065-2222607, 2224269 E-mail : printevergreen@gmail.com
- Bill Books — பில் புத்தகங்கள்
- Letter Heads — கடிதத்தலைப்புகள்
- Wedding Invitation — திருமண அழைப்பிதழ்கள்
- Hand Bills — சுவரொட்டிகள்
- Posters — துண்டுப்பிரசுரங்கள்
- Diaries — கலண்டர்கள் / டயரிகள்
- Calenders
- Certificates — சான்றிதழ்கள்
- And Many More...... — இன்னும் பல.....
அனைத்து வேலைகளையும் தரமாகவும் நேர்த்தியாகவும் மிக விரைவாகவும் செய்து கொடுக்கும் வடக்கு, கிழக்கின் அச்சக முன்னோடிகள்

யாழ் தொழில்நுட்பக் கல்லூரி

# பூனைக்கு மணிகட்டுவதுயார்?

செல்வம்
selvam@deepam.lk

யாழ்ப்பாணத்தில் கல்விகற்கும் மாணவர்களுக்கு பல பிரச்சினைகள் காத்துக் கிடக்கிறன. ஒன்று அவர்களாலேயே பிரச்சினை எழுகிறது. மற்றது ஆசிரியர்கள் விரிவுரையாளர்கள் கல்விநிர்வாகிகளால் பிரச்சினை எழுகிறது. ஏதோ ஒருவழியில் மாணவர்களுக்கு பிரச்சினை எழும் இந்தக் காலத்தில் ஆசிரியர்கள் விரிவுரையாளர்கள் கல்விநிர்வாகிகளால் பிரச்சினை எழக் கூடாது. அப்படி பிரச்சினை எழுந்தால் மாணவர்களின் எதிர்காலம் கூடுதலான பாதிப்பை எதிர்கொள்ளும் என்பதை அவர்கள் உணரவேண்டும்.

கடந்தவாரம் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களில் சிலர் கல்லூரிக்கு உள்ளே போகமுடியாதபடி ஒரு மணித்தியாலத்துக்கு மேல் வெளியே நின்றார்கள். மாணவர்கள் என்றால் ஏதாவது பிரச்சினையை எழுப்பியிருப்பார்கள். அதுதான் அவர்களை வெளியே விட்டிருக்கிறார்கள் என்று நினைத்து அவர்களிடம் நெருங்கினால் பிரச்சினை வேறுமாதிரி இருந்தது. அதாவது அவர்கள் சீருடை அணிந்து வரவில்லை என்று நிர்வாகம் கல்லூரிக்கு உள்ளே வர அனுமதி மறுத்து அவர்களை வெளியே விட்டிருக்கிறது.

எதற்காக அவர்கள் சீருடை அணிந்து வரவில்லை என்று அறிய முற்பட்டபோது சீருடை சிலபேரின் கைக்கு கிடைக்கவில்லை என்றும் சிலபேரின் கைக்குக் கிடைத்தும் அதனைப் போடும் அளவுக்கு அளவில்லை என்றும் அறியமுடிந்தது. இதனால் தான் அவர்கள் அன்றையதினம் சீருடை அணிந்து வரவில்லை. இந்தப் பிரச்சினையை தொழில்நுட்ப நிர்வாகம் சரி செய்துவிட்டு அவர்கள் அதைக் கடைப்பிடிக்கவில்லை என்றால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்கலாம். இந்த நடைமுறையை நிர்வாகம் பின்பற்றத் தவறிவிட்டது.

இதற்குக் காரணம் இந்தக் கல்லூரியில் பணியாற்றும் பிரதிப் பணிப்பாளர் ஆகும். பணிப்பாளர் இருந்தும் இவர் தன்மட்டில் மாணவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்கிறார். அதனால் என்னவோதான் எடுக்கும் நடவடிக்கை தவறானது என்பதை அவர் சிந்தித்துப் பார்க்க நேரமில்லாமல் போனது. இதனால் மாணவர்கள் மனஉளைச் சலுக்கு ஆளாகிவிட்டனர். அவர்களை வெளியே விட்டது மட்டுமல்ல, மரியாதை இல்லாமல் அவர்களை பேசியும் இருக்கிறார்.

ஏன் இப்படி நடந்துகொண்டார். மாணவர்கள் பிரச்சினை கொடுத்தால் திருத்தலாம். மாணவர்களை வழிப்படுத்துபவர் பிரச்சினை கொடுக்கமுடியுமா? ஆனால் அவருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் நிர்வாகம் எடுக்கவில்லை.

பொறுப்பானவர்கள் செய்யும் தவறுகள் திருத்தப்படவேண்டும். மாணவர்களை தண்டனையாக கல்லூரிக்கு வெளியில் நிறுத்தி வைப்பதென்பது சாதாரண விடயமல்ல. அதுவும், கல்லூரியின் நிர்வாக குறைபாட்டிற்காக மாணவர்களிற்கு தண்டனை வழங்குவதைஎந்தவகைக்குள் சேர்ப்பதென்றே தெரியவில்லை.

மாணவர்கள் பிழைசெய்தால் ஆசிரியர்கள் தண்டிக்கிறார்கள். ஆசிரியர்களே பிழை செய்தால் தண்டிப்பது யார்?





**சு.முகுந்தன்**
பணிப்பாளர்
யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி

சீருடையுடன் மாணவர்கள் வரவேண்டும் ஆனால் அவர்கள் வரவில்லை. என்றுதான் பிரதிப் பணிப்பாளர் கல்லூரிக்குள்ளே மாணவர்களை விடவில்லை. ஆனால் சீருடை முழுமையாக மாணவர்களின் கையில் கிடைக்கவில்லை என்பது அவருக்குத் தெரிந்தும் அவசரப்பட்டு நடவடிக்கை எடுத்துவிட்டார். சீருடையுடன் வந்த மாணவர்கள் என்னிடம் வந்துகாட்டினார்கள். அதனைப் பார்த்தேன். சிலபேருக்கு சீருடை அளவில்லை. சிலபேருக்கு கையில் சீருடை போய்ச் சேரவில்லை என்பதை அறிந்து, நான் தான் உடனடியாக அவர்களை உள்ளே விட்டேன்.

சீருடையை சில மாணவர்கள் எடுக்காதபடியால் எடுத்துக் கொள்ளும் படியும் அறிவிக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு அவகாசம் கொடுத்திருக்கிறோம். கண்டியில் இருந்துதான் சீருடை வரவேண்டும். சீருடை போதுமான அளவு வந்து சேரவில்லை. இதனால் தான் பிரச்சினை எழுந்துள்ளது. சீருடை வருவதற்கு காலதாமதம் ஏற்படுவதால் இந்தமுறை யாழ்ப்பாணத்திலே சீருடையை செய்கிறோம்.

---

# கொக்குவில் கிழக்கு பொக்கிஷம்

ஆழ வேர் விட்டு
அகல விழுது விட்டு
அகவை அறுபதை
அடைந்த அந்த
ஆல மர நிழலில்...
சிவப்பு வெள்ளைக்
கோட்டுச் சுவரின்
உள்ளே இருப்பவன்
நாமம் மட்டும்
உதடுகள் வழியே
உதிர்ந்து விழுந்தது
அகவை அவளுக்கு
எட்டொடு பூச்சியம்
கோடை வெயிலின்
கோர அம்புகள்
அங்கம் துளைக்க
வியர்வை துளியுள்
மூழ்கிக் கிடந்தான்
"அம்புஜம்" என்று
அன்று ஓர் நாள்
ஜயாத்துரையர்
அன்பொருக்கில்
பொன்னாடை
போர்த்திய
விழிகள் இரண்டும்
பயந்து பயந்து
பதுங்கும் குழிகள்
முடங்கிக் கொண்டன.
பூவரசு கொடை
வழங்கிய பொல்லுத்தடி
மட்டும்
நீங்கா உறவாக
அவளருகே
உறங்கிக் கிடந்தது.
வன்னிப் பரப்பில்
கன்னியாயிருந்து
காதல் கொடி பறக்க
ஆறு குஞ்சுகள்
அழகாய் அடுக்கி
வாழ்ந்த வாழ்வில்
எத்தனை வளைவுகள்
எத்தனை சுழிவுகள்
ஆறு குஞ்சுகள்
ஆறு கடந்து
நூறு மாதம்
நூலாய்ப் போக
விழிகள் இரண்டும்
தூறல் சுமக்க
கடைசி வேரில்
கால் நடுங்கு மரமாய்
அவன் கிடந்தான்
யாருமே அறியாத
பாசப் பிரளயத்தில்
பந்தாகச் சுழன்ற
அவளது இதயம்
நொருங்கிக் கிடந்த
குழி கிடக்கும் விழிகள்
தூரதேசத்தோர் "பாரம்"
நான் பறக்கும் நேரம்
எனக்
கூறிய படியே
அவள்
பூமித்தாய் மடியில்
இறுதியாய்
அறுதியாய்
அதோ தேவன் வருகிறான்
இறக்கை கொண்டு
அகிலத்தின் பொக்கிஷம்
ஒன்றை
எடுத்துச் செல்ல!

லக்ஷ்மி



# புதுவருடம்



தமிழ், சிங்கள சித்திரை புதுவருடம் பிறக்கிறது. புதிய ஆண்டு.. புதிய உத்வேகம் என எல்லோரும் கொண்டாட்டத்தில் திளைத்துப் போயிருக்கிறார்கள். என்னதான் ஆங்கில வருடப்பிறப்பு என்றிருந்தாலும், நமது பாரம்பரியத்தின் சுவையே தனிதானே. தமிழர்களின் கலாசார, பண்பாட்டு நிகழ்வுகள் அனைத்தும் தமிழ் வருடத்தை அடிப்படையாகக் கொண்டது. புதவருடமென்பது எல்லோரது மரபணுக்குள்ளும் கலந்துள்ள கொண்டாட்டம்.

ஒவ்வொரு வருடமும் புதுவருடம் வருகிறது. ஒவ்வொரு வருடமும் திகட்டாத கொண்டாட்டமும் நிகழ்கிறது. இதுதான் கொண்டாட்டங்களின் மகிமை. திகட்டாத புதுவருடத்தை நம்மவர்கள் எப்படியெல்லாம் கொண்டாடுகிறார்கள்? ஒரு குட்டி 'ரவுண்ட் அப்' இது. யாழ்.வைமன் வீதியில் உள்ள ஆறுதல் நிறுவனத்திற்குள் முதலில் இறங்கினோம்

**அனுஷா ஜெயராஜா**
**துன்னாலை**



சித்திரை வருடப்பிறப்பு என்றாலே ஜாலிதான். அன்றைய நாள் முழுவதும் கொண்டாட்டம்தான். எப்படி போவதே தெரியாமல் போகும். நண்பிகள் எல்லோரும் போன் பண்ணி அங்க வரியா, இங்க வரியா என கேட்டுக் கொண்டேயிருப்பார்கள். வீட்டில் கொண்டாடுவதா, வெளியில் கொண்டாடுவதா என்பதே தெரியாமல் திண்டாடுவோம். வெளியில் போக பெரியவர்கள் விடமாட்டார்கள். குடும்பம், சொந்தக்காரருடன் கொண்டாட வேண்டுமென்பதே அவர்களின் எதிர்பார்ப்பு. ஆனால் நாங்களெல்லாம் பயங்கர ரெரர் பார்ட்டி. இரண்டு தரப்பையும் சமாளித்து ஹப்பி நியூ இயராக்குவம்.

புதுவருசமென்றால் ஊரில் விளையாட்டுப் போட்டிகள் நடக்கும். கட்டாயம் அதில முன்வரிசையில நிற்பம்.

**கோபிகா குலசிங்கம்**
**கலட்டி**

தமிழர்கள் பண்டைய காலம் தொட்டு சித்திரை வருடப்பிறப்பை கொண்டாடி வருகிறார்கள். நாங்களும் தமிழர்தானே. அதனால் சிறப்பாக கொண்டாடுவோம். சின்னவயதில் சொந்தக்காரர் வீடுகளிற்கு சென்றேன். இப்பொழுது நண்பிகள் வீட்டுக்குத்தான் கூடுதலாக போகிறேன். வீட்டிலிருந்தால் தொலைக்காட்சிகளில் நிகழ்ச்சி பார்ப்பேன். அம்மா விடமாட்டாவே... வேலைக்



காக நச்சரித்துக் கொண்டேயிருப்பா. வருடப்பிறப்பு நாளில் அம்மாவையும் கஸ்ரப்பட விட கூடாதுதானே. அதனால் சின்னச்சின்ன வேலைகள் செய்து கொடுப்பேன். அப்பாவை கவிழ்ப்பதற்கு இப்படியான சில நாட்கள்தான் கிடைக்கும். அப்பாவிடம் அனுமதி பெற வேண்டிய விசயங்கள் இருந்தால், இப்படியான நாட்களில் செல்லம் பொழிந்து காரியத்தை முடித்து விடுவேன்.

**பவிதா செல்லத்துரை**
**யாழ்ப்பாணம்**

இந்த நாளில் அம்மா, அப்பாவிடம் கைவிஷேசம் வாங்குகிறோம் என



காசு வாங்கத்தான் பெரும்பாலானவர்கள் முயற்சிக்கிறார்கள். வருசப்பிறப்பிற்கு புது உடுப்பு வேண்டும் என்றும் நச்சரிப்பார்கள். நான் அந்த ரைப் இல்லை. இருக்கிறதை வைத்து பறப்பேன். குடும்பத்துடன் சந்தோசமாக கொண்டாடுவேன். வீட்டில் உருவாகாத சந்தோசம் வேறு எங்கு உருவாகப் போகிறது? வீட்டை இயன்றவரை சந்தோசமாக வைத்திருக்கவே விரும்புவேன். தமிழர், சிங்களவர் எல்லோருக்குமே புதுவருட கொண்டாட்டம்தானே. நாடே கொண்டாடும்போது நமக்கு மட்டும் என்ன குறைச்சல்?

**மகாலிங்கம் ரெஜிலா**
**அரியாலை**



எனது பிள்ளைகளுடன் சேர்ந்து இந்த நாளை கொண்டாடுவேன். கோயிலுக்குப் போய் கடவுளை வணங்கி விட்டு வீட்டுக்கு வருகின்றவர்களை பலகாரம் கொடுத்து உபசரிப்பேன். விஷேசம் என்னவெனில் மருத்து நீர் வைத்து குளிப்பார்கள். இதனால் உடம்பில் இருக்கும் பிணிகள் எல்லாம் அகன்று விடும். பிள்ளைகளிற்கும் மருத்துநீர் வைத்து நீராட வைப்பதுடன் கொண்டாட்டம் ஆரம்பமாகிவிடும். அதிகாலையிலேயே எழுந்து, மிக தாமதமாக இரவில் நித்திரைக்கு செல்லும் நாட்கள் இப்படியான நாட்கள்தான்.

இப்பொழுது நண்பர்கள், உறவினர் வீடுகளிற்கு செல்வதற்கு இப்படியான நாட்கள்தான் கிடைக்கிறது. அதனை மிஸ் பண்ண மாட்டோம்.


வருடப்பிறப்பு ஒருநாள் கொண்டாட்டமல்ல. ஒருவாரம் முன்னரே ஆரம்பித்துவிடும். பலகாரம் சுட வேண்டும். உடுப்பு வாங்கி, தைக்க வேண்டும். ஒருவாரத்தின் முன் ஆரம்பித்து புத்தாண்டுடன் முடியும் கொண்டாட்டமிது.









# எக்ஸாம் என்ரரெயின்ற்மென்ற்


ய.யஸ்ரினா


பா.மேரிஆன்செல்சியா


ச.திவ்யா


அ.மேரிசுபைரா


அ.அமில்ரன்

எக்ஸாம் என்டர்ரெயின்ற்மென்றிற்காக புறப்பட்ட நமது ரீமிடம் இந்த வாரம் சிக்கியவர்கள் யாழ்.நாவாந்துறையைச் சேர்ந்த ய.யஸ்ரினா, பா.மேரி ஆன்செல்சி, ச.திவ்யா, அ.மேரிசுபைரா, அ.அமில்ரன் ஆகியோர்.

என்ன கேள்வியென்றாலும் நாங்கள் ரெடியென வரிந்து கட்டிக் கொண்டு களமிறங்கிய மாணவர்படையுடனான கேள்வி பதில் இது.

**கேள்வி: இலவசக் கல்வியின் தந்தை யார்?**
**பதில்: கன்னங்கார**

***ய.யஸ்ரினா:*** *சும்மா போங்க... இலவசக் கல்வியென்று சொல்லி கடுப்பேத்தாதீங்க.. எங்க போனாலும் பணம்தானே தேவையாக இருக்கு. இந்த திட்டத்தை கொண்டுவந்த W.W. கன்னங்கரா போற்றப்பட வேண்டியவர். ஆனால் இதை யார் இப்பா கடைப்பிடிக்கிறாங்கள்? (அதானே..)*

***பா.மேரிஆன்செல்சியா:*** *W.W. கன்னங்கரா. பொதுஅறிவுக்கு மட்டும்தான் இதை தெரிந்து வைத்திருக்கலாம். ஏனென்றால் பாடசாலைகள் பலவற்றில் பணமிருந்தால்த்தான் படிக்கலாம். அதனால இலவச கல்வியென காமெடி பண்ணக்கூடாது.*

***ச.திவ்யா:*** *கல்வி வியாபாரமான இன்றைய நிலையில் W.W. கன்னங்கராவை மறந்துவிட்டார்கள். வாத்திமாரே இலவசக் கல்வி திட்டத்தை மறந்து விட்டார்கள்.*

***அ.மேரிசுபைரா:*** *ஏதோ கன்னம் என்று தொடங்குகிற பெயர்... (சுற்றவர பார்த்து யாராது உதவிக்கு வருகிறார்களா என பார்க்கிறார்.. கடுமையாக யோசிக்கிறார்) ஆ.. தெரியும். கனங்கராதானே. (அப்பாடா)*

***அ.அமில்ரன்:*** *கன்னங்கரா. அவரால்த்தான் நம்மைப் போன்றவர்கள் எல்லோரும் படிக்க முடிகிறது.*

**கேள்வி: ஆத்திசூடியை எழுதியவர் யார்?**
**பதில்: ஔவையார்**

***ய.யஸ்ரினா:*** *ஔவையார்.*

***பா.மேரிஆன்செல்சி:*** *ஆத்திசூடியா?... ம்... ஞாபகத்துக்கு வந்திட்டுது. ஔவையார் தான்.*

***ச.திவ்யா:*** *குழந்தைப் பிள்ளைக்கே தெரிந்த விசயம் இது. ஔவையார். இதெல்லாம் ஒரு கேள்வியென்று வந்து கலாய்க்கிறியள்.*

***அ.மேரிசுபைரா:*** *ஔவையார். இப்பிடியான சுகமான கேள்விகளையே அடுத்ததாகவும் கேளுங்கள். எல்லாத்துக்கும் புல் மார்க்ஸ் எடுத்திடுறம்.*

***அ.அமில்ரன்:*** *சாதாரண கேள்வியென்று விட்டு இப்பிடி பாடப்புத்தக கேள்வியள் கேட்கிறியளே.. நல்ல வேளை ஔவையார் என்பது தெரிந்ததால தப்பினன். இல்லையென்றால் பப்ளிக்கில அவமானப்பட்டிருக்க வேண்டும். பாஸ் இப்பிடி அலாப்பலாட்டம் ஆடாதையுங்கே.*

**கேள்வி: T20 கிரிக்கெட் போட்டியில் ஒரு இன்னிங்சில் எத்தனை ஓவர்கள் வீசப்படுகின்றன?**
**பதில்: 20 ஓவர்கள்**

***ய.யஸ்ரினா:*** *ஆளை விடுங்கப்பா... நமக்கு இதிலெல்லாம் ஆர்வமில்லை. இந்தப் போட்டிகளில் 20 ஓவர்கள்தான் பந்து வீசப்படும் என்று அறிந்து வைத்திருக்கிறன். அதனால் அதிகமாக வீசமாட்டினம்தானே.*

***பா.மேரிஆன்செல்சி:*** *உந்த விளையாட்டு எல்லாம் நாங்கள் விளையாடுறதில்லை. ஆனால் தெரிந்து வைத்திருக்கிறோம். உங்களைப் போல் யாராவது கேட்டால் 20 ஓவர்கள் என்று சொல்ல.*

***ச.திவ்யா:*** *இப்ப பெண்களும் கிரிக்கெட் விளையாடி வருகிறார்கள் என்பது எமக்கு சந்தோசம். ஆனாலும் அந்தப் பக்கம் நான் போனதில்லை. பலர் கதைக்கிறதை வைத்து 20 ஓவர்கள் என்று தெரிந்து கொண்டேன்.*

***அ.மேரிசுபைரா:*** *எங்கட விளையாட்டைப் பற்றி நீங்கள் கேட்கலாம் தானே. போய்சிடை விளையாட்டைப் பற்றிக் கேட்டால் எனக்கு எப்படித் தெரியும்.*

***அ.அமில்ரன:*** *20 ஓவர்கள்தான். ரியூசன் என்றாலும் கட் அடித்து கிரிக்கெட் பார்க்கிற நாங்கள் எல்லோ.*

**கேள்வி: இலங்கையில் எத்தனை மாவட்டங்கள் உள்ளன?**
**பதில்: 25**

***ய.யஸ்ரினா:*** *எனக்குத் தெரிந்தவரை 25 தான்.*

***பா.மேரிஆன்செல்சி:*** *குடியுரிமை பாடத்திலை நான் 25 என்றுதான் படித்திருக்கிறன்.*

***ச.திவ்யா:*** *வாத்தி மாதிரி கேள்வியைக் கேட்கிறியள். கேள்வி படு வீக். 25 தான்.*

***அ.மேரிசுபைரா:*** *25. எல்லா கேள்விக்கும் விடை சொல்லிட்டன். நூறுக்கு நூறு. சரி.. என்ன பரிசு?*

***அ.அமில்ரன்:*** *அப்பாடா... நான் பயந்த மாதிரி ஒன்றும் நடக்கயில்லை. எல்லாம் ஈசியான கேள்வியள். தாங்ஸ் தீபம். 25 மாவட்டம். ஆத்தா... நான் பாஸாயிட்டன்!*



ஏறாவூர் தமிழ்மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுனர் போட்டி அண்மையில் நடந்தது. அன்றையதினம் பாடசாலை ஸ்தாபகர் கந்தசாமியின் உருவச்சிலையும் திறந்து வைக்கப்பட்டது.









தோடு, நெக்லஸ், அச்சு வேலைகள், தங்கபவுண் வேலைகள் செய்து கொடுக்கப்படும்

இல. 236, 82/5, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 077 4844324



# கேள்விக்கு என்ன பதில்?





**புவனேஸ்வரன் தர்சிகன்**
**குட்செட் வீதி, வவுனியா**

*வன்னியில் கூட்டமைப்பே அதிக ஆசனங்களைப் பெற்றுள்ளது. ஆனால் பிரதேச அபிவிருத்திக் குழுக்களின் வேறு கட்சிக் காரர்களே முதன்மைப்படுத்துகின்றனர். இந்தக் கூட்டங்களில் நீங்கள் பார்வையாளராகவே இருக்கின்றீர்கள். நல்லாட்சி என நீங்கள் கூறும் அரசுக்கு ஆதரவு வழங்கும் நீங்கள் உமது பிரதேச கூட்டங்களின் தலைமைகளைப் பெற உங்கள் அரசுக்கு அழுத்தம் கொடுக்க முடியாதா? பிரதேச அபிவிருத்தியில் பங்கெடுக்க முடியாதா?*

**சிவசக்தி ஆனந்தன்:** முதலாவதாக இந்தச் செய்கை மாகாணத்தின் அதிகாரங்களைத் தட்டிப்பறிக்கும் செயலாகவே பார்க்கப்படவேண்டும். முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து தெளிவாக விளக்கமளித்துள்ளார். மாகாண முதலமைச்சருடன் மத்திய அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைத்தலைவர்களாக இருப்பார்கள் என்று அறிவித்திருப்பதிலிருந்தே இதன் சூக்குமத்தை உணர்ந்துகொள்ள முடியும். மாகாண முதலமைச்சரும் மத்திய அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மத்திய கபினட் அமைச்சரும் இணைத்தலைவர்களாக இருப்பதே பொருத்தமானது. இவர்களுடன் மாகாண அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து பணியாற்றுவதே சாலச்சிறந்தது. இதனை நாமும் தெளிவாக விளக்கியிருக்கின்றோம். இருப்பினும் எம்மில் சிலர் இந்த பதவிகளைப் பெற்றுக்கொண்டுள்ளது எமக்கு கவலை அளிக்கின்றது.

எது எப்படியிருப்பினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்கும் விபரங்கள் கூட உரிய அதிகாரிகள் மட்டத்திலிருந்து நேரகாலத்திற்குக் கிடைப்பதில்லை. சிலவேளைகளில் கிடைப்பதே இல்லை. தனிநாடுகேட்டு போராடிய நாம் இன்றைய சூழலில் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப்பகிர்வைக் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். இந்நிலையில் மாகாண முதலமைச்சர் மத்திய அரசாங்கத்தின் கீழ் வருகின்ற அரசாங்க அதிபர் போன்றோர்களுக்கு நேரரியாக உத்தரவிட முடியாமல் மத்திய அமைச்சரினூடாகவே அபிவிருத்திக் கூட்டத்தின் வாயிலாக உத்தரவுகளையும் ஆலோசனைகளையும் வழங்க வேண்டியுள்ளது. இதனைத் தட்டிக்கேட்டு உரிய அதிகாரங்களைப் பெற்றுக்கொடுப்பதற்குப் போராடுவதற்குப் பதிலாக இணைத்தலைவர் பதவிகளைப் பெற்றுக்கொண்டமையை எம்மால் புரிந்துகொள்ள முடியாதுள்ளது.



**ஐங்கரமுத்து யோகநாதன்**
**தவசிகுளம், வவுனியா**

*நீங்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் நீண்டகாலமாக பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்றீர்கள். ஆனால் நீங்கள் அங்கத்துவம் வகிக்கும் உங்கள் ஈபிஆர்எல்எப் கட்சித் தலைவர் தமிழ் மக்கள் பேரவையில் இருக்கின்றார். இது உங்கள் கட்சியின் அரசியல் நடவடிக்கைக்கு தடையாகவில்லையா?*

**சிவசக்தி ஆனந்தன்:** முதலாவதாக தமிழ் மக்கள் பேரவை எதற்காக உருவாக்கப்பட்டது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். தேர்தலில் போட்டியிட்டு எமது மக்களின் பிரதிநிதிகளாக ஜனநாயக அமைப்புக்களில் பங்குபற்றி எமது உரிமைப் போராட்டத்தின் நியாயத்தையும் எமது மக்களின் அபிலாசைகளையும் தெளிவாக உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் எடுத்துச் செல்லும் நோக்குடன் தேர்தல் களத்தில் பணிபுரிகின்ற கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திகழ்கின்றது. இதுவரை உரிமைப்போராட்டங்கள் நடைபெற்ற நாடுகளிலும், தேசிய இனவிடுதலையை வலியுறுத்திப் போராட்டத்தில் வெற்றிபெற்ற மற்றும் போராடிவருகின்ற நாடுகளில் பாராளுமன்ற அரசியலுக்கு அப்பால் அல்லது கட்சி அரசியலுக்கு அப்பால் மக்களை அரசியல்மயப்படுத்துவதற்கும் அணிதிரட்டுவதற்கும் வெகுஜன அமைப்புகள் பணிபுரிந்திருக்கின்றன. அந்தவகையில் தேர்தல் அரசியிலிலிருந்து விலகி அரசியல் வழிகாட்டுதல்களுடன் மக்களை அரசியல் மயப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டதே தமிழ் மக்கள் பேரவை என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

சமூகத்தின் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய வெகுஜன அமைப்பு ஒன்று தேவை என்பதை நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரிடமும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தோம். கூட்டமைப்பில் இருக்க வேண்டிய கட்டமைப்புகள் குறித்து நாங்கள் தெரிவித்தவற்றை இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது கட்சிக்குள் உள்வாங்கியதே தவிர, கூட்டமைப்பில் அத்தகைய கட்டமைப்புக்களை உருவாக்க முன்வரவில்லை. உதாரணத்திற்கு தொழிற்சங்க அமைப்புக்களை எடுத்துக்கொண்டால் அவை கட்சி அரசியல் சாராத அந்தந்த தொழிலாளர்களின் நலன் சார்ந்ததாக இருக்கும். தமது உரிமைகளை நிலைநாட்டிக்கொள்வதற்காக தொழிலாளர்கள் அந்த அமைப்பில் இணைந்திருப்பார்கள். தேர்தல் என்று வருகின்றபொழுது அவர்கள் தமது தெரிவு குறித்த முடிவை தாமே மேற்கொள்வர்.

ஆகவேதான் தமிழ் மக்கள் நலன்சார்ந்து புத்திஜீவிகளுடனும், தொழில்நுட்ப வல்லுனர்களுடனும், சமூக ஆர்வலர்களுடனும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடனும் மனித உரிமை அமைப்புக்களுடனும் நாமும் இணைந்து தமிழ் மக்கள் பேரவையை உருவாக்கினோம். இதற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிப்பதற்கும் எதுவிதத் தொடர்பும் கிடையாது. சர்வதேச போராட்ட செல்நெறியைத் தெறிந்துகொண்டவர்கள் இவ்வாறு குழப்பமடைய மாட்டார்கள்.



**இராசதுரை வசந்தகுமார்,**
**கோவில்குளம், வவுனியா**

*தமிழ் தேசியக் கூட்டமைப்பு புதிய நல்லாட்சி உருவாக்குவதற்கு கடுமையாக உழைத்தது. தேர்தல் மேடைகளில் காணாமல் போனோர், அரசியல் கைதிகள், காணி சுவீகரிப்பு பிரச்சனைகளுக்கு விரைவில் தீர்வு தருவதாகவும் கூறினீர்கள். ஆனால் இதற்கான மக்கள் போராட்டங்களை கூட்டமைப்பினரே கட்டுப்படுத்துகிறார்களே?*

**சிவசக்தி ஆனந்தன்:** ஆட்சி மாற்றம் ஏற்படவேண்டும். அதன் மூலம் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2010ஆம் ஆண்டில் சரத்பொன்சேகாவையும் 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறீசேனவையும் ஆதரிக்க முடிவெடுத்தது. முன்னைய தேர்தலில் எமது முயற்சி பலனளிக்கவில்லை. ஆனால் 2015இல் தென்னிலங்கையில் உள்ள ஆளும் வர்க்கத்தினருக்கே ஆட்சி மாற்றம் தேவைப்பட்டதால் சாத்தியமானது. இதிலும் வடக்குகிழக்கில் உள்ள தமிழ்பேசும் மக்களின் பெருமளவிலான வாக்குகளும் ஏனைய பகுதிகளிலுள்ள பெரும்பான்மையினரின் குறைவான வாக்குகளுமே மைத்திரியை வெற்றிகொள்ள வைத்தது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னரே கடந்தகாலத்தில் நிகழ்ந்த தவறுகள் வெளிவரத் தொடங்கியுள்ளன என்பதையும் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஆட்சி மாற்றத்தை சகல வருத்தங்களுக்குமான மருந்தாக நினைத்துவிடக்கூடாது. இது எமது போராட்டத்தின் ஒருபடிநிலை. தேர்தல் காலத்தில் நாம் சில நிபந்தனைகளை விதிக்குமாறும் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையைச் செய்துகொள்ளுமாறும் கோரினோம். ஆனால் கூட்டமைப்பின் தலைவர் அதற்கு அவசியமில்லை எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்று நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

2015ஆம் ஆண்டின் பொதுத்தேர்தலின் மூலம் தேசிய அரசாங்கம் என்ற பெயரில் வடக்குகிழக்கு தவிர்ந்த ஏனைய இடங்களில் பெரும்பான்மை இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகள் இரண்டும் ஓரணியில் திரண்டு நல்லாட்சி அரசாங்கம் என்ற பெயரில் ஒரு அரசாங்கத்தை நிறுவியுள்ளனர். அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிரக்கட்சி அந்தஸ்தும் வழங்கப்பட்டு கூட்டமைப்பின் தலைவருக்கு எதிர்க்கட்சி தலைவர் பதவியும் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளைத் தீர்க்கும் விடயத்திலும் நிரந்தர அரசியல் தீர்வு விடயத்திலும் காரியங்கள் எதிர்பார்த்த அளவிற்கு நகரவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

மே 2009ஆம் ஆண்டு வவுனியாவில் தமிழ் மக்கள் செறிந்துவாழும் வவுனியா, வெங்கலச் செட்டிகுளம் மற்றும் வவுனியா வடக்கு ஆகிய மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்தும் 47.6 சதுரகிலோமீட்டர் பரப்பளவு காணி அபகரிக்கப்பட்டு சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற வவுனியா தெற்கு பிரதேச செயலகப் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதில் கொக்கச்சான்குளம் என்ற தமிழ் கிராமம் கலாபோகஸ்வெள என்று பெயர் மாற்றம் செய்யப்பட்ட கிராமமும் உள்ளடங்குகிறது.

காணாமல் போகச்செய்யப்பட்டோர் தொடர்பிலும் சரி, அரசியல் கைதிகளின் விடுதலை விடயத்திலும்சரி, காணி அபகரிப்பு, வீட்டுத்திட்டம் போன்ற இன்னோறன்ன விடயங்களில் இந்த அரசாங்கம் செயற்படுகின்ற விதத்தைப் பார்த்தால் மக்களுடன் விதியில் இறங்கிப் போராடுவதைத் தவிர வேறுவழியில்லை என்பதுபோல் தோன்றுகின்றது.

இதில் ஒரு ஆறுதலான விடயம் என்னவென்றால், தற்போதைய ஜனாதிபதியும் பிரதமரும் இந்த நாட்டில் மாறிமாறி ஆட்சி செய்தவர்கள் தமிழ் மக்கள் விடயத்தில் பாரிய தவறுகளை இழைத்துள்ளார்கள் என்பதை பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளனர். இதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய தார்மீகப் பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஜனநாயகச் செயற்பாடுகளில் விடயங்கள் சற்று தாமதமாகவே முனநகரும். ஆனால் அது தானாக நகரும் என்று நாம் சும்மா இருந்துவிடமுடியாது. அரசாங்கத்திற்கு தொடர்ந்தும் அழுத்தங்களைப் பிரயோகித்த வண்ணம் இருக்க வேண்டும். இதனையே நாம் சகல மட்டங்களிலும் செய்தும் வருகின்றோம்.



**பன்னிருகரம் மணிவண்ணன்**
**நெடுங்கேணி, வவுனியா**

*தமிழ் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கப் போகிறது? அது தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியஎ வகையில் இருக்குமா?*

**சிவசக்தி ஆனந்தன்:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்வுத்திட்டத்தை இன்னும் நாமே பார்க்கவில்லை. இதற்கிடையில் தமிழ் மக்கள் பேரவையினால் ஒரு தீர்வுத்திட்ட வரைபு முன்வைக்கப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் ஆட்சிப் பீடத்தில் இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை ஒரு தீர்வுத்திட்ட வரைபை தயாரித்துக்கொண்டிருக்கின்றது. ஆனால் இவைகளுக்கெல்லாம் வழிகாட்டவேண்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் அத்தகைய தீர்வுத்திட்டத்தை கட்சிகளுக்குள்ளும் மக்கள் மத்தியிலும் வெளியிடாமல் இருப்பது வேதனையான விடயம்.




இல. 19, பஸ் நிலையத்திற்கு அருகில், யாழ்ப்பாணம். / இல. 196, இராமநாதன் வீதி, திருநெல்வேலி. / தொலைபேசி : 077 7158088 / 077 3615302

## விளையாட ஆசைப்படும் சோனாக்சி


இந்தியப் பெண்கள் கிரிக்கெட் அணி நன்றாக விளையாடினாலும், யாரும் கண்டுகொள்ளவேயில்லையென கவலைப்பட்டுள்ளார் சோனாக்சி சின்ஹா. இந்திய பெண்கள் அணியை யாரும் பாராட்டவேயில்லையென்றும் கொதித்துள்ளார். விளையாட்டு வீராங்கனையாக நடிக்க ஆசையென்றும் கூறியுள்ளார். அண்மைக்காலமாக விளையாட்டின் மீதான ஆர்வம் அதிகரித்து வருகிறதென்றும் கூறியுள்ளார். சோனாக்சியின் கால்சீட்டிற்காக பல இயக்குனர்கள் காத்திருக்கும் நிலையில், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதனையடுத்து விளையாட்டு வீராங்கனை கதையை தயார்செய்யும் வேலையில் இறங்கியுள்ளனராம்.



## ஏமாற்றிய நடிகை

சஞ்சிதா செட்டி தற்பொழுது நடித்துவரும் படம் 'ரம்'. நிறையப் புதுமுகங்கள் நடிக்கிறார்கள். இதுஒரு திகில் படம். பெரும்பாலான சம்பவங்கள் இரவிலேயே நடக்கிறது. ஒரு பெரிய கார் சேசிங் சேஸ் காட்சியும் உண்டு. நாயகிதான் கார் ஓட்ட வேண்டும். இயக்குனர் கதை சொன்னபோது தனக்கு கார் ஓட்டத் தெரியும் என பொய் சொன்ன சஞ் சிதா, அதன் பின்னர்தான் அவசரமாக கார் ஓட்டக்கற்றுக் கொண்டுள்ளார். சேஸிங் காட்சி படமாக்கப்பட்டபோது சஞ்சிதாவிற்கு நன்றாக கார் ஓட்ட தெரியவில்லை. அதை மறைத்து காரை கிளப்பி கன்னாபின்னாவென ஓடியுள்ளார். எல்லோரும் பயந்து அலறியுள்ளனர். நல்ல வேளையாக யாருக்கும் எதுவும் ஆகவில்லை. பின்னர் டூப் வைத்து அந்த காட்சியை படமாக்கினார்களாம்.





## தல சர்ச்சை

அஜித்தின் 57வது படத்தை சிவா இயக்குகிறார். சத்யஜோதி பிலிம்ஸ் தயாரிக்கும் இந்தப்படத்தின் படப்பிடிப்பு ஜூனில் ஆரம்பிக்கிறது. இந்தப்படமே தொடங்க முன்னர் 58வது படம் பற்றிய ஆரவாரம் கிளம்பியுள்ளது. சோழர்காலத்தில் நடக்கும் சம்பவத்தை அடிப்படையாக வைத்து விஸ்ணுவர்த்தன் இயக்குவார் என முதலில் செய்திகள் வந்தன. இப்பொழுது வேறொரு செய்தி வெளியாகியுள்ளது. அடுத்த வருடத்தில் ஏ.ஆர். முருகதாஸ் இயக்குவார் என்ற செய்தியும் வந்துள்ளது. இருவரில் யார் தலயை இயக்கப் போகிறார்கள் என அறிய ரசிகர்கள் தவமாய் தவமிருக்கிறார்கள்.




# டூரிங் டாக்கீஸ்

## தனுசால் மட்டுமே முடியும்



'தொடரி' படத்தில் தனுசின் நடிப்பை வெகுவாக பாராட்டியிருக்கிறார் பிரபு சாலமன். பாத்திரத்தை உணர்ந்து நடிக்கும் தனுசினால் தனது வேலை பாதி குறைந்துவிட்டதென்றுள்ளார். தொடரி என்ற பெயரே சர்ச்சையை கிளப்பியுள்ள நிலையில், இரயில் பயணத்தில் நடக்கும் கதையென்பதால் அப்படி தலைப்பு வைத்தேன் என சிரிக்கிறார். முழுப்படமும் ரயிலில் எடுக்கப்படும் முதல் தமிழ்ப்படமாக தொடரி இருக்கும் என்கிறார்.

## பேயை துரத்தும் சந்தானம்



ஹீரோ ஆன பின்னர் நகைச்சுவை வேடங்களை சந்தானம் தவிர்த்துவிட்டார். எந்தப்படத்தையும் ஒத்துக்கொள்வதில்லை. ஆனால் தான் நடிக்கும் படங்களில் நகைச்சுவைக்கு பஞ்சம் வராமல் பார்த்துக் கொள்வார். தற்போது நடித்துவரும் 'தில்லுக்கு துட்டு' என்ற படத்தின் நகைச்சுவை காட்சிகள் எல்லோரையும் கவருமென படக்குழு சொல்கிறது. இதுவொரு பேய்ப்படமாம். இதுவரை பேயைப்பார்த்துதான் மற்றவர்கள் பயப்பிடுவதை போன்ற படங்கள் வந்தன. இந்தப்படத்தில் சந்தானம் பேய்களையே ஓடஓட விரட்டுகிறாராம்.

## ஏன் கொன்றார் சத்யராஜ்?



பாகுபலியில் நாயகன் பிரபாசை விசுவாச தளபதியாக செயற்பட்ட சத்யராஜ் ஏன் கொன்றார் என்பதற்கு பாகுபலி 2 விடை சொல்லுமாம். அரசகதையான அதில் வரும் கதாபாத்திரங்களிற்கிடையிலான மோதல்களிற்கான காரணங்கள் அத்தனையையும் பாகுபலி 2 வெளிப்படுத்துவதால், இரண்டாம் பாகமே உணர்ச்சிபூர்வமாக இருக்கும் என்கிறார் இயக்குனர் ராஜமௌலி. இதற்குள் அவர் ஒரு நகைச்சுவையும் விட்டுள்ளார். 'பிரபாஸை கிளைமாக்சில் சத்யராஜ் ஏன் கொன்றார் என கேட்கிறார்கள். அதற்கு காரணம் நான் அவரை கொல்லச் சொன்னதுதான்' என்றுள்ளார்.

## தாக்குப்பிடிப்பாரா இஸா?

தமிழ் திரையுலகத்தில் மலையாள நாயகிகளின் ஆதிகத்திற்கு குறைவில்லை. நயன்தாரா, லட்சுமிமேனன் போன்றவர்கள் மலையாள வரவுகள்தான். காவ்யா மாதவன், நவ்யா நாயர், அனன்யா என தலைகாட்டிவிட்டு தலைமறைவானவர்கள் பட்டியல் நீளமானது. அதில்த்தான் இஸா தல்வார் பெயரும் இருந்தது. 'தில்லு முல்லு' என்ற ஒரு படத்துடன் திரும்பிச் சென்றுவிட்டார். இப்பொழுது மீண்டும் தமிழுக்கு வருகிறார். மலையாளத்தில் அவர் நடித்த படமொன்று தமிழில் 'மீண்டும் ஒரு காதல் கதை' என்ற பெயரில் ரீமேக் ஆகிறது. தமிழிலும் இஸாதான் நாயகி. ஏற்கனவே தாக்குபிடிக்க முடியாமல் தலைமறைவானவர் இம்முறையாவது தமிழில் இடத்தை பிடிப்பாரா?



## நெற்றியடி ஐஸ்வர்யா

தமிழ் தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள், நடிகர்களின் நெற்றிப்பொட்டில் செம அடி விட்டிருக்கிறார் ஐஸ்வர்யா ராஜேஸ். இன்றைய திகதியில் தமிழில் அதிக படங்கள் நடிப்பவர் இவர்தான். தற்போதுள்ளவர்களில் நன்றாக நடிக்கத் தெரிந்தவரும் இவர்தான். தற்போது ஒரு டசின் படங்கள் கைவசம் வைத்திருக்கிறார். 'நீங்கள் எல்லாம் இப்ப பெரிய நடிகை' என ஒரு நிருபர் சொல்ல, சொன்ன பதிலிலேயே நெற்றியடி கொடுத்துள்ளார். 'நான் மும்பையிலிருந்து வரவில்லையே. அங்கிருந்து வந்தால்த்தானே பெரிய நடிகையென இங்கு கொண்டாடுவார்கள். இப்பொழுதுதான் இந்திப்படமொன்றில் நடிக்கிறேன். அங்கு சில படம் முடித்துவிட்டு வரும்போது பெரிய நடிகையென ஒத்துக்கொள்வார்கள் என நினைக்கிறேன்' என செம டோஸ் விட்டுள்ளார்.

# கிருஸ்ணரை ஆராதிக்கும் பெண்கள்

## உரும்பிராயில் ஒரு உண்மைக்கதை

பி.சியா
siya@deepam.lk



கிருஸ்ணரில் காதல் கொண்டு தன்னை அர்ப்பணித்த ஆண்டாளின் கதை எல்லோருக்கும் தெரியும். மனிதர்களிற்கும் கடவுளுக்குமிடையிலான உறவுப்பிணைப் பின் கதைகள் பல. காதலிற்கு தெய்வீகமணம் கமழச் செய்தது ஆண்டாள் ஆண்டவன் காதல்கதை.

ஆண்டாளின் கதைமரபோ என்னவோ யாழிலும் ஆண்டாள் பாணி வழிபாட்டுமுறை உள்ள ஆலயமொன்று உள்ளது. உரும்பிராயில் உள்ள கிறிஸ்ணன் கோவிலில் பரம்பரை பரம்பரையாக பெண்கள் பூசையை நடாத்தி வருகின்றார்கள். விசேட நாட்களில் மட்டும் ஆண்கள் பூசை செய்யும் முறை உள்ளது. அதுவும் பெண்களுடன் இணைந்து தான் செய்து முடிக்கின்றார்கள். இந்த ஆலயத்தின் பூசகர்கள் ஒரே பரம்பரையைச் சேர்ந்த வர்கள். பரம்பரை பரம்பரையாக ஒரே தலை முறையினால் இன்றும் தொடர்ந்து பூசைகள் நடாத்தப்பட்டு வருகின்றது. இங்கு வரும் அடியவர்களும் பக்தி நிறைந்தவர்களாகவும் அதி உச்ச நாராயணன் நம்பிக்கை உடையவர்களாகவும் காணப்படுகின்றனர்.

குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள், திருமணமாகாதவர்கள், கல்வியில் வெற்றி பெறாதவர்கள், நோயாளிகள், வெளிநாடு செல்ல விரும்புபவர்கள் என்று வரம் கேட்கும் பலரும் இங்கு வந்து அவர்களுக்கு கிரக தோசங்கள் ஏதும் இருப்பின் அதற் கேற்றால் போல் தீபாராதனை மற்றும் பால் அபிஷேகங்கள் செய்து நாராயணனை வழிபட்டால் அவர்கள் கேட்ட பலன் கிடைத்து விடும் என்பது அப் பகுதியிலுள்ள வர்கள், அங்கு வரும் பக்தர்கள், பூசகர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகவுள்ளது.

இந்த ஆலயத்தை தெரியாதவர்கள் கூட



கனவு கண்டு ஆலயத்தை தேடி வந்து வழிபட்டு பூஜை வேளையில் கண்ணீர் விட்டு அழுது கும்பிட்டு நாமம் போடுகையில் தமது குறையை கூறி பரிகாரத்திற்கு வழி கேட்டு நாராயணனை வழிபட்டு செல்லும் வரலாறும் அண்மையில் கூட இடம் பெற்றதாக பூசை செய்யும் அம்மையார் குறிப்பிட்டார்.

பெண்கள் ஆண்கள் மாணவர்கள் என்று பலர் இங்கு வந்து தேங்காயில் நெய் விட்டு தீபம் ஏற்றி ஆலய முன் பகுதியில் கொடிக்கம் பத்தின் கீழ் உள்ள நாக கிரகங்களுக்கு பால் அபிஷேகம் செய்கின்றனர். 7 புதன் கிழமை 11 ஞாயிற்று கிழமை என்று தமது பிரச்சினைகளுக்கு ஏற்றால் போல் இந்த வழிபாட்டை செய்து பலன் பெறுவதாகவும் தமக்கு இந்த நாராயணன் மேல் அதீத நம்பிக்கையுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

குருநாதர் என்பவரே இந்த ஆலயத்தின் ஆரம்ப கர்த்தாவாகவும். அவர் காட்டிய வழியில் அவருடைய பரம்பரையின் வழியில் தான் இன்றும் இங்கு பூஜைகள் இடம் பெறுகின்றன. பெண்கள் அதிகம் கொண்ட பரம்பரை என்பதால் பெண்கள் பூஜை செய்யும் முறை ஆரம்பமாகி இடம் பெற்று வருகின்றது என்கின்றார் செல்வி என்னும் தற்போது பூஜை செய்யும் அம்மையார். குருநாதர் ஒரு கிறிஸ்தவ பரம்பரையில் உதிர்த்தவர். இளம் வயதிலேயே தந்தையை இழந்த இவர் பாடசாலைக் கல்வியை நிறுத்தி தொழிலில் ஈடுபடத் தொடங்கி கப்பல் தொழிலில் ஈடுபட்டார். அதன் பின்னர் கொழும்பில் உள்ள உறவுகளுடன் வசித்தார். இவரின் தனிமையை போக்க உறவுகள் திருமணம் செய்து வைக்க காலன் இவரின் 35 வயதிலேயே மனைவி மகன் என்று இவர்



குடும்பத்தை பறித்து விட்டது. பின்னர் நோய்வாய்ப்பட்டிருந்த குருநாதரின் நோயை போக்க உறவினர்கள் பொழும்பில் உள்ள இந்து ஆலயமான தெகிலலை கிருஸ்ணன் கோவிலுக்கு அலைத்துச் சென்றனர். ஆனால் தான் கிறிஸ்தவர் என்றும் விபூதி வாங்க மாட்டேனென பூசகருடன் தகராறு ஏற்படுத்திய குருநாதருக்கு நாராயணன் பல வடிவில் தோன்றி தனதுருவத்தைக் காட்ட பித்து பிடித்தவராக குருநாதரானார்.

அதன் பின்னர் கோப்பாய் வந்த குருநாதர் தீராத நோய்களை கூட தீபாராதணை மற்றும் கூட்டுப் பிரார்த்தணை மூலம் மாற்றினார். தொடக்கி வைத்த அவர் காட்டிய வழியில் தான் உரும்பிராய் கிருஸ்ணன் கோவில். இங்கு பூசைகள் யாவும் அன்று போலே அவர் காட்டிய வழியில் தான் இடம் பெறுகின்றது என்றார் தற்பொழுது பூஜை செய்து வரும் செல்வி என்னும் அம்மையார்.

நாம் இந்த ஆலயத்தில் தொண்டு செய்ய ஆரம்பித்து பரிகாரம் செய்ய ஆரம்பித்து சிறிது காலத்திலே எமக்கு வரம் கிடைத்து விடுகின்றது என அதீத நம்பிக்கை வார்த்தை களை கொட்டுகின்றார்கள் அங்கு வரும் பக்தர்கள். இந்த ஆலயத்தில் குருநாதரின் சமாதி மூலஸ்தானத்தின் பின் பகுதியில் வைக்கப்பட்டுள்ளது.

ஒரு நாள் ஒரு பெண் கண்ணீருடன் வந்து அழுதழுது குருநாதர் சமாதியை சுற்றி கும்பிட்டார் என்னம்மா என்ன நடந்த என்று கேட்டதற்கு, தான் ஆலயத்தை சுத்தி கும்பிடும் பொர்ழுது குரு நாதர் சமாதியை கும்பிடுவதில்லை. ஆனால் நேற்று என் கனவில் குருநாதர் பகிரங்கமாக தோன்றினார். என் தவறை உணர வைத்தார் என்று கண்ணீர் சொட்ட சொல்லி குருநாதரை அன்றிலிருந்து சுற்றி கும்பிட ஆரம்பித்த சிறு காலத்தில் அந்த பெண் பிள்ளை திருமணமாகி இன்று ஒரு பிள்ளையுடன் சந்தோசமாக வாழ்கின்றார். இதே போல் கா.பொ.த உயர் தரத்தில் விஞ் ஞானப் பிரிவில் சித்தியடையாத மாணவி ஆலயத்தில் வந்து நின்று அழுததை தாங்க முடியாமல் 11 புதன் செய்ய வேண்டிய தீபாராதணை முறையை சொல்லி கொடுக்க அந்த பிள்ளையும் தவறாமல் செய்து இரண்டாவது தடவை 3ஏ எடுத்து இப்பொழுது வைத்தியராகவுள்ளார். இப்படி பல விதமான சம்பவங்கள் நாராயணன் அருளால் இவர்களின் நம்பிக்கைக்கு ஏற்ப தினமும் கொடுக்கப்படுகின்றது என்றார் பூஜை செய்யும் அம்மையார்.




**கஜிதா**
உரும்பிராய்

**நா**ன் இந்த ஆலயத்தை சிறு வயதில் இருந்தே கும்பிட்டு வருகின்றேன். எந்த ஒரு விடயத்தையும் நினைத்தால் செய்து முடிக்க வேண்டும் என்பது எனது குறிக்கோள். ஆனால் அதை நாராயணரிடம் கேட்டால் எப்படியும் கிடைத்து விடும். அத்துடன் எந்த ஒரு நோயின் பொழுதும் நாராயணனின் நாமம் போட்டால் பாதி நோய் தீர்ந்து விடும். இப்பொழுது கூட தலையிடி என்பதால் நாமம் போட்டு வழிபடத்தான் ஆலயம் வந்தேன். அதிசயங்கள் என்பது எல்லோருக்கும் நிகழ்வதில்லை. ஆனால் நான் அறிய பலர் பல விதமான அதிசயங்களை அனுபவித்ததாக கூறுகின்றனர் தான்.

### பூஜை முறை:

இங்கு பெண்களால் நடாத்தப்படும் தினசரி பூஜை புதன், ஞாயிறு ஆகிய தினங் களில் தான் விசேடமானது. அத்துடன் தலையை சேலைத் தாவணியால் தலைப் பாகை போட்டு தான் இங்கு பூஜைகள் இடம் பெறுகின்றது. ஆலயத்தின் முன்புறத் தில் உள்ள கொடிக்கம்பம் வலது பக்கத்தில் அமையப்பட்டுள்ள மடம் என்று எல்லாமே நமது ஏனைய ஆலயங்களைவிட வேறுபட் டவை. பூஜையின் பொழுது தீபாராதணை கூட்டுப்பிரார்த்தனைக்கு முதலிடம் கொடுக்கப்படுவதுடன். தமிழ் மந்திரத்திற்கு பதிலாக பாடல் பொன்ற வார்த்தைளை தமிழில் உபயோகப்படுத்தியே இங்கு பூஜைகள் இடம் பெறுகின்றது. சில வேளைகளில் ஆலயத்தின் பின்புறத்தில் உள்ள அரசு மரத்திரல் பாம்பொன்று உள்ளதாக பலரும் கூறுவதை போன்று பாம்பு கொட்டாவி விடுகையில் வரும் பால் மணம் வீசுவதாகவும் அங்குள்ளவர்கள் கூறுகிறார்கள்.





சோதிட ஆலோசகர்
சி.இராசநாயகம்
0776147392





# சோதிடம் தரும் வாரபலன்கள்

## 10.04.2016 முதல் 16.04.2016 வரை

### மேடராசி

***சாதகமானவை:*** குடும்பசுகம், இனசன பந்து சுகம், பயணம், தேகநலன் இருத்தல், பொருள் சேர்க்கை, செய்கருமம் வெற்றி, ஆடை அலங்காரம், பெண்களால் சுகம் பெறுதல், தூரச் செய்தி கிட்டுதல், பெரியோர்கள் சந்திப்பு, நல்ல சுப நிகழ்வில் பங்கேற்றல், சுற்றம் வருகை உண்டு.

***பாதகமானவை:*** மனத்துயரம், மனச்சஞ் சலம், இவமானம், சிறு நஸ்டநிலை, நம்பிக்கை வைக்க முடியாத நிலை, பொருள் விரயம், இடையில் நோய் கண்டு குணமாதல், விபத்துக்கள் குறித்து எச்சரிக்கை, வழக்கு விவகாரம் தோல்வி நிலை, வியாபார மோதல் என்பவை தரும்.

***அதிர்ஸ்ட நாட்கள்: 11,12,15 திகதிகள்.***

### இடபராசி

***சாதகமானவை:*** சொத்து, செல்வம், சேமிப்பு இருத்தல், பெண்களால் நன்மை உண்டாதல், செய்தொழில் மேன்மை, குடும்ப உறவு அமைதல், போஜனசுகம், ஊக்கம் உற்சாகம் உழைப்பில் காணப்படுதல், அரச அதிகாரிகள் சந்திப்பு, தொலைதூரச் செய்தி அறிதல், நண்பர் சேர்தல், தெய்வ வழிபாடு அமையும்.

***பாதகமானவை:*** தேகநலன் குறை வடைதல், சிறு நஸ்டம் பெறுதல், இனசனபந்து கசப்புணர்வுகள், சிறைப்பயம் காணுதல், இடையிடையே காரியத்தடை, நித்திரை பாதிப்பு, வீண் விரயம், மனச்சஞ்சலம் தரும்.

***அதிர்ஸ்ட நாட்கள்: 11,13,15 திகதிகள்.***

### மிதுனராசி

***சாதகமானவை:*** சுபம் கிட்டுதல், தெய்வ வழிபாடு, மனச்சந்தோசம், பொருள் சேர்க்கை, பணவரவுகள், கல்விச் சிறப்பு, தொழில் சிறப்பு, சச்சரவு, பிணக்கு வெற்றி நிலை, சுப நிகழ்வுகளில் பங்கேற்றல், இனசனசுற்றம் சந்திப்பு, நல்ல பணம் சேர்தல் உண்டு.

***பாதகமானவை:*** அவதூறுப்படல், வாக்குவாதம், கருமங்களில் நஸ்டநிலை, பொருள் விரயம், சிலசில இடைஞ்சல்கள், மனைவிக்கு உடல் நலப் பாதிப்பு, வீண் சிரமம், வீண் அலைச்சல், பொருட்கள் திருட்டுப் போகும் நிலையும் காட்டும்.

***அதிர்ஸ்ட நாட்கள்: 11,13,14 திகதிகள்.***

### கடகராசி

***சாதகமானவை:*** தெய்வ வழிபாடுகள், சொற்பொழிவுகள் கேட்டல், தேகசுகம் கிடைத்தல், பணவரவுகள் உண்டாதல், சில தரும காரியங்களில் பங்கேற்றல், குடும்ப உறவு வலுத்தல், பொருள் வரவுகள், பயணங்கள் இருத்தல், இனசன சுற்றம் பெரியோர் வருகை, ஆடை அணிகலன்கள் சேர்க்கை, நல்ல செய்தி அறிதல், இனியவை சாப்பிடுதல், பெண்கள் சகவாசம் கிட்டுதல்.

***பாதகமானவை:*** கெட்டவார்த்தைகள் கேட்கும் நிலை, சிறுசிறு சச்சரவு, பிணக்கு நிலை, வகிக்கும் நிலைகளில் சில மாறுதல்கள், பணவிரயம் தருதல், மனச்சஞ்சலம், நோய் கண்டு குணம் பெறுதல், புதிய முயற்சிகள் வெற்றி தராத நிலை, என்பவற்றையும் கொடுக்கும்.

***அதிர்ஸ்ட நாட்கள்:11,14,15 திகதிகள்.***

### சிம்மராசி

***சாதகமானவை:*** குடும்ப நலன் கிடைத்தல், இனசன பந்துக்களால் சில சுகம் கிடைத்தல், குடும்ப உறவுகள் அமைதல், அதிகாரம் கொண்டு செயற்படுதல், பொருள் இலாபம் இருத்தல், சுபநிகழ்வுகளில் பங்கேற்கும் நிலை, இடம் மாறி இருக்கும் நிலை, பெண்கள் தொடர்பு இருத்தல், முயற்சிகளில் சாதகமான நிலை, தெய்வ தரிசனங்கள், தர்ம சிந்தனை, புண்ணிய கருமம் அமையும்.

***பாதகமானவை:*** மனத்துயரம் பெறுதல், பிணக்குகளில் சிக்கிக் கொள்ளல், பகை உருவாதல், சிறைப் பயமிருத்தல், வயிற்றில் வியாதிகள் உண்டாதல், மறதிக்குணம் இருத்தல், இடையில் பணவிரயம் காட்டுதல், விபத்து நிலை தருதல், வழக்குகள் தோல்வி நிலை, அலைச்சல்கள், வியாபார மோதல்கள், என்பனவையும் இருக்கும்.

***அதிர்ஸ்ட நாட்கள்:10,13,14 திகதிகள்.***

### கன்னிராசி

***சாதகமானவை:*** சொத்துக்கள் அசைவன அசையாதவை என சேர்தல்,மனத்திருப்தி சுப நிலை காட்டுதல், காரிய அனுகூலம், நல்ல அதிகாரம் கொண்டு செயற்படுதல், நல்ல ஆடை அணிகலன்கள் சேர்தல், தூர இடச் செய்தி கிடைத்தல், நல்ல மனிதர் சந்திப்பு, பணவருவாய் அதிகரிப்பு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளல் நடந்தேறும்.

***பாதகமானவை:*** தேகசுகம் பாதிப் படைதல், பிரயாணங்களில் எச்சரிக்கை, வயிற்றில் நோய் காட்டுதல், பொருள் விரயம், எதிரி தொல்லை, வீண் விரயம், உணவில் வெறுப்பு நிலை, தலைவலி அதிகம் கண்டு குணம் பெறுதலும் உண்டு.

***அதிர்ஸ்ட நாட்கள்: 11,14,15 திகதிகள்.***

### துலாம்ராசி

***சாதகமானவை:*** தேகசுகம் நன்றாயமைதல், நல்ல பல புத்திமதிகள் பலரிடம் கேட்டல், தெய்வ வழிபாடுகள் இருத்தல், கருமங்கள் அனுகூலம் பெறுதல், பொருள் சேர்தல், போஜனசுகம், நல்ல உற்சாகமாய் தொழிற் படுதல், ஆடை ஆபரணம் கிடைத்தல், குருமார்கள் சந்திப்பு, புண்ணிய நன்மை கதைகள் அறிதல், சுபச் செய்தியும் உண்டு.

***பாதகமானவை:*** கெட்டவார்த்தை கேட்கும் நிலை, சில விடயங்களில் பணவரவு இருத்தல், இருக்கும் நிலைகளில் மாற்றங்கள், வயிற்றில் வியாதி தொற்றுதல், தாயாருக்கு உடல் நலக்குறைவு, சிறைப்பயம் காட்டுதல், வீண் சிரமம், வீண் அலைச்சல் என்பவையும் தரும்.

***அதிர்ஸ்ட நாட்கள்: 13,15,16 திகதிகள்.***

### விருச்சிகராசி

***சாதகமானவை:*** குடும்ப நலன் அமைதல், இனசனபந்துக்களால் சுகம் கிடைத்தல், பகை வெல்லுதல், செய்தொழில் மேன்மை, புகழ் கெளரவம் நிலைத்து இருத்தல், திரவியலாபம், மனச்சந்தோசம், போஜனசுகம் கிட்டுதல், சுபமங்கள நிகழ்வுகளில் பங்கேற்றல், பெரியோர் சந்திப்பு, வியாபார முயற்சி வெற்றி, தெய்வ வழிபாடும் காணப்படும்.

***பாதகமானவை:*** மனத்துயரம் பெறுதல், சச்சரவு நிலை, பிணக்கு நிலை பெறுதல், புத்தி மந்தம், நிலையில் மாறுதல், பகை தோன்றல், நோய், பிணியால் துயரம் கொள்ளல், பிரயாணங்களில் அவதானம் தேவைப்படல், வயிற்றில் நோய் காட்டுதல், பணவிரயம், மனப்பயம் என்பன தரும்.

***அதிர்ஸ்ட நாட்கள்: 12,15,16 திகதிகள்.***

### தனுசுராசி

***சாதகமானவை:*** சொத்து சுகம் சேருதல், சுபமான நிலை, பெண்களினால் சுகம், நன்மை இருத்தல், திரவியலாபம், இனசனபந்து சேர்தல், மனச்சந்தோச நிலை, போஜனசுகம், நல்ல அதிகாரம், ஆடைஆபரணம் கிடைத்தல், பெரியோர்கள் சந்திப்பு, சுபநிகழ்வுகளில் பங்கு கொள்ளல், ஆடைஆபரண சேர்க்கை, பெண்கள் சகவாசம் கிட்டுதல், காரிய வெற்றியும் தரும்.

***பாதகமானவை:*** தேகசுகம் பாதிக்கப் படுதல், எதிரிகளால் பயமுண்டாதல், கௌரவம் பாதிக்கப்படுதல், கருமங்களில் தாமத நிலை, பிரயாண பயம் காட்டுதல், நோய் பிணியால் பணவிரயம், உணவில் வெறுப்பு, பொருள் களவு கொடுத்தல், வீண் மனஸ்தாபம், சில தாமத நிலையும் காட்டும்.

***அதிர்ஸ்ட நாட்கள்: 12,13,14 திகதிகள்.***

### மகரராசி

***சாதகமானவை:*** நல்ல சுப சௌகர்ய நிலை, நல்ல போதனை பெறல், தெய்வ வழிபாடு அமைதல், மனதில் சந்தோசம் உற்சாகம், நன்மைகள் சேர்தல், புத்தி மேன்மை அமைதல், இனசன பந்து நண்பர் வருகை, கணவன்மனைவி உறவு நலம் பெறுதல், அரச அதிகாரிகள் சந்திப்பு, தொலை தூரச் செய்தி கிட்டுதல் என்பனவும் உண்டு.

***பாதகமானவை:*** துர்வாரத்தை அவதூறு நிலை, சில நம்பிக்கையீனம் கொள்ளும் நிலை, இடையில் வியாதி கண்டு குணமடைதல், மனச்சஞ்சலம், சிறு தடை நிலை, பயணங்களில் ஆபத்து நிலை, சிறுசிறுசச்சரவு நிலை, நேரம் தப்பிய போஜனமும் இருக்கச் செய்யும்.

***அதிர்ஸ்ட நாட்கள்: 11,13,15 திகதிகள்.***

### கும்பராசி

***சாதகமானவை:*** இனசனபந்து சுகம், களத்திர சுகம், இலட்சுமிகரம், திரவியலாபம், பெண்கள் சவகாசம், பெண்களால் நன்மை, தொலைதூரச் செய்தி கிட்டுதல், அதிகாரிகள் சந்திப்பு, ஆடைஆபரணம் சேர்தல், இனசனம் வருகை, நல்ல ஊக்கமுடன் உழைப்பு, சுப வைபங்களில் கலந்து கொள்ளுதல், வியாபாரத் திறமை வெளிப்படுதல் உண்டு.

***பாதகமானவை:*** மனச்சஞ்சலம் காட்டுதல், பிணக்குகளில் சிக்கிக் கொள்ளுதல், இருக்கும் நிலைகளில் மாற்றம், மனப்பயம் பெறுதல், சில நம்பிக்கை வைக்காத நிலைகள் தோன்றுதல், சிறுசிறு நோய் பாதிப்பு, பணவிரயம் உண்டாதல், நூதனமான பொருட்கள் சில அடையப் பெறுதல், வீண் விரயம், வீண் சிரமம் காட்டும் பலன் அமையும். .

***அதிர்ஸ்ட நாட்கள்: 11,14,16 திகதிகள்.***

### மீனராசி

***சாதகமானவை:*** சுபம், சம்பத்து பெண்களினால் சந்தோசம் நன்மை, குடும்ப உறவு நல்ல நிலை, நல்ல பண்புகள் வெளிப்படுதல், பிரயாணங்கள் செய்யும் நிலை, பெரியோர் சந்திப்பு, சுப செய்தி கிடைத்தல், தெய்வ வழிபாடு, பிரசங்கமத் போன்ற நிலை காட்டுதல், லாபகரமான முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றியும் தரும்.

***பாதகமானவை:*** உடல் நலம் பாதிப்பான நிலை, வாக்குவாத நிலை, சில நஸ்டம் காணப் படுதல், சில நம்பிக்கையீனம் வெளிப்படுதல், கருமங்கள் சில தாமத நிலை பெறல், மனத்துயரம், பணவிரயம், எதிரி பகையாளி தொல்லை, திருடர் பயமும் உண்டாகும்.

***அதிர்ஸ்ட நாட்கள்: 10,12,14 திகதிகள்.***

சந்திராஷ்டமம் உள்ள நாட்களில் நோய், பிணி, துன்பம், கஸ்டம், நஷ்டம், அலைச்சல், இழப்புக்கள் ஏற்படலாம் என்பது சோதிட விதி ஆகும். இதனைக் கருத்தில் கொள்ளவும்.


### இவ்வார சந்திராஷ்டம நிலை.

*கன்னிராசி: 10 ஆம் திகதிகள்.*
*துலாராசி: 11,12 ஆம் திகதிகள்.*
*விருச்சிகராசி: 13,14 ஆம் திகதிகள்.*
*தனுராசி: 15,16 ஆம் திகதிகள்.*

*ஏனைய இராசிக்கும் இவ்வாரம் சந்திராஷ்டமம் இல்லை.*



# இயற்கையை கொல்லும் பேரழிவு



சட்டவிரோத மண் அகழ்வு என்ற இயற்கையை கொல்லும் பேரழிவை மேற்கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து சென்றுகொண்டிருக்கும் நிலையில், மக்களே அவர்களிற்கு எதிராக குரல்கொடுக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. மன்னாரின் தம்பனைகுளத்திற்கு அண்மையில் அப்படியொரு சம்பவம் பதிவாகியுள்ளது.

தம்பனைகுளத்திற்கு அண்மையாக உள்ள தனியார் காணியொன்றில் சட்டவிரோத மண்அகழ்வு நடந்து வந்துள்ளதாக மக்கள் நீண்டாலமாக புகார்கூறி வந்தனர். அதிகாரிகளிற்கு பலமுறை முறையிட்டும் பலன்கிட்டவில்லை. கடந்த வாரமும் வழக்கம் போல மண்அகழ்வு நடந்து கொண்டிருந்த சமயத்தில், பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனிற்கு விடயத்தை அறிவித்துள்ளனர். அவர் அங்கு சென்றபோது டிப்பர் வாகனமொன்று மண் ஏற்றியபடி நின்றுள்ளது. உடனடியாக தம்பனைகுளம் பொலிஸ் பொறுப்பதிகாரியை தொடர்பு கொண்டு விடயத்தை அறிவித்துள்ளார். மன்னார் மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரியும் சம்பவ இடத்திற்கு சென்று வாகனத்தை சோதனையிட்டபோது, உரிய ஆவணங்களின்றி சட்டவிரோத மண்அகழ்வு நடந்தது அம்பலத்திற்கு வந்துள்ளது.

தீபத்தின் இந்த மாபெரும்
பரிசுத்திட்டத்தில் சரியான விடையெழுதி
வெற்றியாளர் ஆகும் வாய்ப்பை இன்றே
உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்...

தீபத்தின் பரிசு மழை

கேள்வி
ஆசியாவின் மிக நீண்ட மலைத்தொடர்கள் எவை?

பதில் : ..............................
பெயர் : ..............................
முகவரி : ..............................
தொ.பே : ..............................

இந்த கூப்பனை வெட்டி நிரப்பி எமது அலுவலக முகவரிக்கு
தபாலிலோ அல்லது நிரப்பப்பட்ட கூப்பனை புகைப்படம் எடுத்து
facebook/DeepamNews என்ற முகபுத்தகத்தினூடாக எமக்கு அனுப்பவும்.
வெற்றியாளர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு
பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.
இல. 24, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 6633



முதல் பக்கம் படம் உதவி: ஈரோடு சுரேஷ்

தீபத்தின் பரிசு மழை
சென்ற வார வெற்றியாளர்கள்

ஜெயானந்தராசா கிருஷிகன்
235, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

உ. டிலக்சனா
793, நாவலர் வீதி, அரியாலை.

குணரட்னம் உமாகாந்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

கேள்வி
கிளிநொச்சி தனி மாவட்டம் ஆனது எந்த ஆண்டு?
பதில்
1984 ஆம் ஆண்டு






சைனா கெய்றெற்சி
தமிழில்: தேவா

# குழந்தைப் போராளி

ஓர் ஆணும் இறங்கினார், அது என் அப்பா. அவர்களிருவரும் சிரித்துக்கொண்டும் பேசிக்கொண்டும் வந்துகொண்டிருந்தனர். அப்பாவின் பல்வரிசை அவர் சிரிக்கும்போது முழுவதுமாகத் தெரிந்தது. கூடிய சீக்கிரம் அப்பா அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்யப் போகிறார் என்று நான் நினைத்துக் கொண்டேன். அவர்களிருவருமே ஒருவரில் ஒருவர் மூழ்கியிருந்ததால் என்னை அவர்கள் கவனிக்கவே இல்லை.

வீட்டிற்குச் செல்லும் வழியில் எனது நீளக் கைச்சட்டையைத் தூக்கி எனது கையை அப்பாவிற்குக் காட்டினேன். கேள்வி கேட்டால் அந்தப் பொய்யைச் சொல்ல ஆயத்தமாயிருந்தேன். அவர் நீண்ட நேரமாக எனது கையைப் பரிசோதித்து விட்டு யார் எனது கையில் தடி வைத்துக்கட்டியதெனக் கேட்கப் பாட்டி எனப் பதில் சொன்னேன். அது குணமாகிவிடுமெனக் கூறிக் கொண்டே அப்பாவீட்டினுள் சென்றார். நான் வீட்டினுள் அறையின் ஒரு மூலையில் ஒடுங்கிக் கொண்டு யாராவது என்னுடன் பேசுவார்களா எனப் பார்த்துக் கொண்டிருந்தேன். யாருமே பேசாததினால் வெளியே சென்றபோது அந்த அழகிய பெண் என்னைக் கூப்பிட்டுக் "குழந்தையைச் சிறிது நேரம் தூக்கிக் கொள்கின்றாயா?" எனக் கேட்டார். குழந்தை? எந்தக் குழந்தை? சிலவேளை இவளும் பைத்தியக்காரியோ? எல்லோர் பார்வையும் என் மீதே இருந்தது. 'நான்தானே இந்த வீட்டின் ஒரே குழந்தை'யென நான் கூற, ஏதோ பெரியதொரு நகைச்சுவையை நான் கூறியது போல அவர்கள் உரக்கச் சிரிக்கத்தொடங்கினர். அந்தப் பெண் என்னைத் தன் பக்கத்தில் இருக்கச் சொல்லி என் மடியில் அந்த வெள்ளைப் பொதியை வைத்தார். அது ஒரு குழந்தை எனத் தெரிந்து கொண்டேன். அது ஆணா பெண்ணா என நான் கேட்பதற்கு முன்னமே குழந்தை என்னை நனைத்தது, நானே தெரிந்து கொண்டேன், அது ஒரு ஆண் குழந்தை. எனது எல்லாத் தைரியங்களையும் ஒன்று திரட்டிக்கொண்டே அந்தப் பெண்ணிடம் "நீங்கள் யார்?" எனக் கேட்டேன். "நான் உனது தாய்" என அந்தப் பெண் பதில் தந்தார்.

சிறிது நேரத்தின் பின் நான் ஆட்டுக்குட்டிகளைத் தேடிச் சென்றபோது எனது மனம் நிர்மலமாயிருந்தது. என்னுள் புதிய நம்பிக்கை தோன்றத் தொடங்கியது. கடைசியில் பாட்டியின் பிடியிலிருந்து என்னைக் காப்பாற்ற ஒருவர் வந்து விட்டாரென நினைத்துக்கொண்டேன். அப்பா, நானும் அம்மாவும் வசிப்பதிற்குப் புதிய வீடொன்றைக் கட்டப்போவதாகக் கூறினார். இந்தச் செய்தியைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியாக அவர்கள் பக்கத்திலேயே இருந்து அப்பாவின் மிகுதித் திட்டத்தையும் கேட்டுக் கொண்டேயிருந்தேன்.

### பொய்த்துப் போன நம்பிக்கைகள்

உண்மையிலேயே வீடு கட்டப்பட்டது. பாட்டியின் வீட்டிலிருந்து இரண்டு கிலோ மீற்றர்கள் தூரத்தில் பெரிய வீடு. பல அறைகள், சமயலறை, அத்துடன் ஆடு மாடுகளும் எங்களுடன் வந்தன. புதிய பண்ணையின் சுற்றாடலும் பழையதைப் போலவே இருந்ததால் பெரிய மாற்றமொன்றும் இல்லாதிருந்தது.

புதிய வீட்டில் வாழ்க்கை வேறு மாதிரி இருந்தது. பாட்டி வாழைத்தோட்டத்தை முன்பு போலவே பார்த்துக் கொண்டிருந்தாலும் அம்மா அது தொடர்பாகப் பாட்டிக்கு ஏராளமான நிர்வாகக் கட்டளைகளைப் பிறப்பிப்பார். இது ஒரு முக்கியமான மாற்றம். அப்பா எங்களுடன் இருக்கவில்லை. தனது நகரத்து வீட்டிற்குப் போய்விட்டார். இந்த வீட்டில் நான், புதிய அம்மா, புதிய குழந்தை மூவரும்தான். அம்மா என்மீது அன்பும் விருப்பமும் வைத்திருந்தார் என்றே நினைக்கின்றேன். மெல்ல மெல்ல நானும் மகிழ்ச்சியை உணரத் தொடங்கினேன். அத்துடன் மெதுவாக எனது தன்நம்பிக்கையும் வளரத் தொடங்கி அம்மாவிற்குப் பாட்டி வீட்டில் நடந்தவைகளையெல்லாம் சொல்லத் துணிந்தேன். எவ்வளவு கொடுமைகளை நான் தாங்க வேண்டியிருந்ததெனக் கூறி அம்மாவின் மனதில் இடம் பிடிக்க முயன்றேன்.

எனக்கு ஐந்து வயதிருக்குமென நினைக்கிறேன். அம்மா மீண்டும் கருத்தரித்தார். எனக்கு இது பற்றி ஒன்றுமே தெரியவில்லை. யாரும் இது பற்றி எனக்கு எதுவும் கூறவில்லை. எங்கு எப்படி அம்மாவின் இரண்டாவது குழந்தை பமிலா என்ற பெண்குழந்தை பிறக்கப்போகிறது என்பது எனக்குப் புரியாத புதிர். ஆரம்பத்தில் மகிழ்வாகவே இருந்தது. இன்னுமொரு சிறிய குழந்தையுடன் நான் இருக்கலாம், இன்னும் சிறிது காலத்தில் அம்மா இல்லாத வேளைகளில் நான் பமிலாவைக் கவனித்துக்கொள்ளலாம் என்றெல்லாம் நினைக்க உற்சாகமாகயிருந்தது.









திருமதி
ச.கார்த்திஹாயினி
வின்னீஸ் லக்கி
இந்தியன் பியூட்டி பார்லர்
திருநெல்வேலி
Joykarthiha 3014@gmail.com



# அழகின் இரகசியம் 13

# தானியங்களும் அழகுக்கு கை கொடுக்கும்



**உளுத்தம் பருப்பு:**

சில தானிய வகைகள் சரும பூச்சுக்கு உபயோகப்படுத்துவதில்லை. என்னும் உடல் ஆரோக்கியத்திற்கு உகந்ததாக இருக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருந்தாலே சரும புற அழகும் தானாக வந்து சேருமல்லவா? உளுத்தம் பருப்பில் இரும்புத் சத்தும் புரத சத்தும் அதிகளவில் இருக்கின்றது. குறிப்பாக உளுத்தம் தோலில் அதிக சத்து இருக்கின்றது.

பெண்களின் கருப்பைக்கு வலுவூட்டக் கூடிய சக்தி உளுந்தில் இருக்கின்றது. இடுப்பிற்கு உறுதி சேர்க்க கூடியது. உளுந்தை வறுத்து மாவாக்கி சக்கரை நெய் சேர்த்து களி செய்து முதல் மாத விலக்காகும் பெண்களுக்கு கொடுத்து வந்தால் கருப்பை பலமாகவிருக்கும். மாதவிலக்கின் போது ஏற்படும் வலி இல்லாது நோமலாகவிருக்கும். பிரண்டையும் உளுத்தம் மாவும் சேர்த்து செய்யும் அப்பளமும் உடலுக்கு நல்லது.

**பார்லி:**

வட இந்தியர்கள் அளவிற்கு நமது நாட்டில் பார்லியை உபயோகிப்பது இல்லை. பார்லியின் மகத்துவம் தெரியாமலேயே பலர் இருக்கின்றார்கள். உடலில் அதிகபடியாக நீர் சத்து அதிகமாகி விட்டால் அதை குறைக்க கட்டுப்படுத்த பார்லி உபயோகப்படுத்தலாம்.

கர்ப்பிணிப் பெண்களுக்கு நீர் சத்து உப்பு சத்து அதிகமாகி விட்டால் கை கால் பெரிதாக வீங்கி விடும். இதற்கு காலையில் ஒரு டம்ளரும் மாலையில் ஒரு டம்ளரும் பார்லியில் ஊற வைத்த நீரை குடித்து வந்தால் வேண்டாத நீரை எடுக்கும். பார்லி கஞ்சி அருந்துவதும் உடலுக்க நன்மை பயக்கும்.

**கோதுமை**

கோதுமையில் பல வகைகள் இருந்தாலும் அதன் குணம் சற்று ஏறக் குறைய ஒன்று தான். உடல் பலம் குறைந்தவர்கள் கோதுமைக் கஞ்சியை சாப்பிட்டு வந்தால் உடலுக்கு நல்ல பலம் கிடைக்கும். சருமத்தில் உள்ள இறந்த செல்களை நீக்கி வாரம் ஒரு முறை கோதுமை மாவை எடுத்து நீரில் டிப்ஸ் செய்து போடவும். கோதுமையை சுத்தமான ஈரத்துணியில் போட்டு முளை கட்டியதும் அதை எடுத்து போத்தலில் வளர்த்தால் செடியாக வளரும். அதில் ஒரு இஞ் அளவிற்கு வெட்டி தூய்மையான நீரோடு சேர்த்து குளித்து வரலாம். இதையே wheat grass juice என்கிறார்கள். இது இரத்தத்தை சுத்தம் செய்யக் கூடியது. இயற்கையாகவே பல நோய்களை குணப்படுத்தக் கூடிய சக்தி இந்த கோதுமை புல் சாருக்கு உண்டு.

**ஓட்ஸ்**

நோயிலிருந்து மீண்டவர்கள் ஓட்ஸ் உட்கொள்ளும்படி மேல் நாடுகளில் மூலிகை நிபுணர்கள் சிபாரிசு செய்கிறார்கள். ஜீரணத்திற்கு சிரமம் தராத உடலுக்கு புத்துணர்ச்சியைக் கொடுக்க கூடிய உணவு மருந்து ஓட்ஸ்.

ஓட்ஸ்சில் மாச்சத்து புரதச் சத்து விட்டமின் பீயும் ஈயும் உள்ளன. மேலும் தாது உப்புக்கள் பொட்டாசியம் பொஸ்பரசும் உள்ளன. இருதயத்திற்கு பலமூட்டக் கூடிய ஓட்ஸ் கொலஸ்ரோலை கட்டுப்படுத்துகின்றது. ஓட்ஸ் கஞ்சியை அருந்தினால் களைப்பிலிருந்து நிவாரணம் கிடைக்கும். நோய் எதிர்ப்பு சக்தியை கொடுக்கக் கூடிய ஓட்ஸ் ரிக்கெட்ஸ் என்கிற எலும்பு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால் நல்ல பலன் கிடைக்கம்.

உடல் ஆரோக்கியத்திற்கு மட்டுமல்லாது சருமப் பராமரிப்பிற்கும் அழகிற்கும் ஓட்ஸ் சிறந்ததாக கொள்ளப்படுகின்றது. இதில் இயற்கையாகவே எண்ணெய் பசை உண்டு. உலர் சருமத்திற்கு உகந்ததாக ஓட்ஸ் கருதப்படுகின்றது. சிறிதளவு ஓட்சைப் பாலில் வேக வைத்து ஆற வைத்து முகத்தில் பூசி கழுவலாம்.

உலர் சருமத்திற்கு அருமையாக பக் ஓட்சையும் தேனையும் கலந்து பூசலாம். இத்துடன் எழுமிச்சம் பல சாறு சிறிது கலந்து பூசினால் பியூட்டி பார்லரில் ப்ளீச் செய்த எஃபெக்ட் கிடைக்கும்.

ஒவ்வொருவரின் சமையலறையிலும் அவசியம் இடம் பெற வேண்டியது ஓட்ஸ் மா.

**கருஞ்சீரகம்**

இது தலைமுடிக்கு குளிர்ச்சியைக் கொடுக்க கூடியது. கருஞ் சீரகத்தை 4டிஸ்பூன் எடுத்துக் கொண்டு லேசாக வறுக்கவும். 250 மில்லி லீட்டர் நல்லெண்ணெய்யை காச்சி அதில் போட்டு வேக விடவும். (எண்ணெய் புகை வரும்படி சூடாக்க கூடாது.) பின் ஆறியதும் இந்த எண்ணெயை வடிகட்டி வைத்து கொண்டு தலையில் தேய்த்து வரலாம்.

தொடரும்...

# உள்ளதை கொண்டு அழகாக அலங்கரிப்போம் வீட்டை



வீட்டை அலங்கரிப்பது என்பது தனி கலை. இதற்காக நேரம் செலவு செய்ய வேண்டாம். சின்ன சின்ன ரசனையோடு இருக்கிற பொருட்களைக் கொண்டு இல்லத்தை அலங்கரித்தாலே போதும் நம் வீடும் அரண்மனைபோல மாறும். வீட்டு உள் அலங்கார நிபுணர்கள் கொடுத்துள்ள ஆலோசனைகளை பின்பற்றி பாருங்கள் உங்கள் வீடும் அழகாய் மாறும்.

**புத்துணர்வை தரும் மலர்**

வீட்டின் நுழைவு வாயிலின் வலது மூலையில், டெரகோட்டா உருளியிலோ, அல்லது வட்டமான பாத்திரத்திலோ, தண்ணீர் நிரப்பி, சிறு பூக்களை அடர்த்தியாய் பரப்பி விடவும். இந்த மலர் அலங்காரம் பார்க்கும் போதே மனதிற்கு புத்துணர்ச்சி தரும்.

**இயற்கை காட்சிகள்**

வீட்டின் விறாந்தையில் நுழைந்தவுடன் கண்ணில் படும் இடத்தில் சுவரில் இயற்கைக் காட்சிப்படமோ அல்லது குழந்தையின் படமோ மாட்டலாம். அது உற்சாகத்தை தரும். விறாந்தையில் தட்டை மேசை(ரீபோ) மீது மடித்து வைத்த பேப்பர்கள், போன் அருகே பிள்ளையார் அல்லது சிரிக்கும் வேறு தெய்வபடங்கள் அல்லது தாமிரத்திலான பொம்மை ஒன்றை வைக்கலாம். அல்லது மெழுகுவர்த்தியை ஸ்டாண்டுடன் வைக்கலாம். சின்ன ஷோகேஸ் செய்து விறாந்தையில் சுவர் நடுவே அமைத்து அதில் அலங்கார பொருட்களை வைக்கலாம். தட்டை மேசை (ரீபோ) மேல் சின்னதாய் ஒரு பூ ஜாடி வைத்து நம் வீட்டு தோட்டத்தில் பூத்த பூக்களை அன்றாடம் பறித்து அலங்கரிப்பது வீட்டினை உயிரோட்டமுள்ளதாக மாற்றும்.

**அழகான பெயிண்டிங்**

எம்ராய்டரி செய்த கர்ச்சிப் துணிகளை ப்ரேம் போட்டு சுவர் அலங்காரமாய் மாட்டலாம். அழகான பெயிண்டிங் உள்ள கலண்டர்களை தூக்கிப் போடாமல் ப்ரேம் போட்டு டைனிங் ரூம், விறாந்தையில் மாட்டலாம். செலவு அதிகம் ஏற்படாது. தரை அழுக்காகாகமல் இருக்க வினைல் சீட்களை ஒட்டலாம். குறைவான விலையில் நிறைவான அழகை பெறலாம்.

**சமையலறை அழகு**

சமையலறை அலுமாரியில் ப்ளாஸ்டிக் டப்பாக்களை ஒரே நிறத்தில் சிறிதும் பெரிதுமாய் வாங்கி தேவையான சாமான்களை நிரப்புங்கள். மிக்சி க்ரைண்டருக்கு மேடை மூலையில் இடம் கொடுங்கள். க்ரைண்டருக்குக் கீழே புஷ் கொடுத்து விட்டால் அதை டேபிளின் கீழே இழுத்துத் தள்ளி விடலாம்.

டைனிங் டேபிள் மீது சின்ன ப்ளவர் வேஸோ, அல்லது கட்லரி செட்டோ விருப்பப்படி ஒழுங்காய் அமைக்கலாம். டேபிளும் மடிக்கும் விதமாயிருந்தால் வசதியாய் இருக்கும். இடத்தை அடைக்காது. பூஜை அறைக்கு என்று இடம் இல்லாதவர்கள் சமையலறையின் வடகிழக்கு மூலைச் சுவரில் சிறு அலமாரி செய்து மணி அமைத்த




தேக்குக்கதவோடு பூஜைக்கான இடம் அமைக்கலாம்.

**படுக்கையறை அழகு**

படுக்கை அறையின் அழகை கெடுப்பது ஒழுங்காக வைக்கப்படாத தலையணை, போர்வைகள்தான். இன்பில்ட்காட் என்னும் மேற்புறம் திறந்தால் உள்ளே அதிக இடம் கொண்ட கட்டில்களை படுக்கை அறையில் போட்டு விட்டால் அதிகப்படி தலையணை போர்வைகளை அதில் ஒளிக்கலாம். இடத்தையும் அடைக்காது. கூடுமான வரையில் தரையில் எந்தப் பொருளையும் வைக்காமல் இருந்தாலே அதுவே தனி அழகுதான்.

# பிரசவத்தின் பின்னரான உடற்பயிற்சிகள்


வைத்தியகலாநிதி
ம.தக்ஷாயினி
உதவி சுகாதார வைத்திய அதிகாரி
சுகாதார வைத்திய அதிகாரி
பணிமனை - நல்லூர்



இன்றைய காலகட்டத்தில் சரீர உழைப்பற்ற இலகுவாழ்க்கை முறையினால் (Sedentartlifestyle) பிரசவத்தின் பின்னரான உடற்பருமனால் பல பெண்கள் பாதிக்கப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இதனால் குழந்தைப் பேற்றின் பின் உடல் ஆரோக்கியத்தைப் பேண ஓய்வும் உடற்பயிற்சியும் அவசியமாகும்.

உடற்பயிற்சி பிரசவத்தின் பின் எவ்வாறான தன்மைகளைத் தருகின்றன எனப் பார்த்தால் நாரிப் பகுதியில் உள்ள தசைநார்கள் கர்ப்ப காலத்தில் ஏற்படும் மாற்றங்களினால் தளர்வடைந்து வலுவற்றுக் காணப்படும். வயிற்றுத் தசைகளும் அவை தளர்ந்து மீண்டும் வலுவடையாது பின்வரும் பிரச்சனைகள் ஏற்படலாம்.

1. சிறுநீர் கழிப்பதற்கு ஏற்ற இடம், நேரத்தை தேர்ந்தெடுக்க முன்னரே உங்கள் கட்டுப்பாடின்றி சிறுநீர் வெளியேறி விடும்.
2. உடலுறவின் போது திருப்தியிராமை.
3. பொதுவாக பெண்கள் கூறும் குடலிறக்கம் எனப்படும் கர்ப்பப்பை இறக்கம் உருவாதல்.
4. இடுப்பு வலி.
5. இவற்றை விட வயிற்று தசைகள் தளர்வடைந்திருப்பதனால் ஏற்படும் தொப்பை.

இவற்றை விட பிரச்சனைகளிலிருந்து விடுவித்துக் கொள்ள நாரித் தசைகளும், வயிற்றுத் தசைகளும் மீண்டும் வலுவடைய வேண்டும். இவ்வாறாக நாரித் தசைகளும், வயிற்றுத் தசைகளும் வலுவடைந்து இரத்த ஓட்டம் சீராக்கப்பட்ட பிரசவத்தின் பின்னரான உடற்பயிற்சிகள் உதவுகின்றன.

அத்துடன் பெண்கள் தமது பிரசவத்தின் முன்னரான சரீர அமைப்பைப் பெற உதவுகின்றது. முதலாம் நாள் தொடக்கம் பிரச்சினைகள் ஆரம்பித்து விடலாம்.

### 01. ஆழமாக மூச்செடுத்து விடுதல்.

படத்திற் காட்டியவாறு நிமிர்ந்து படுக்கவும். மூக்கினூடாக ஆழமான மூச்சை எடுத்து (மனதினுள் ஒன்று தொடக்கம் பத்து எண்ணும் வரை மெதுவாக ஆழமாக மூச்சை எடுத்தல்) பின்னர் ஒன்று தொடக்கம் பத்து எண்ணியவாறு மெதுவாக மூச்சை வெளியே விடுதல் வேண்டும்.

இவ்வாறு ஒரு நேரத்தில் 5 தொடக்கம் 10 தடவைகள் செய்தல் வேண்டும்.

### 02. இடுப்புத் தசைகளை வலுவடையச் செய்யும் பயிற்சி

இதனை நீங்கள் படுத்திருந்தவாறோ இல்லை, கதிரையில் நேராக அமர்ந்தவாறோ செய்ய முடியும்.

இதற்கு நீங்கள் வயிற்றின் அடிப்பகுதியை உள்நோக்கியும் வெளிநோக்கியும் இழுக்கவும். ஒரு நாளில் பல தடவைகள் செய்தல் வேண்டும்'.

### 03. நாரி தசைகளுக்குள்ளான இடுப்பை உயர்த்தும் பயிற்சி.

தலைக்கு ஒரு தலையணை வைத்து நிமிர்ந்து நேராகப்படுக்கவும், கைகள் பக்கவாட்டில் இருக்க வேண்டும். மெதுவாக வயிற்றுத் தசையை உள்நோக்கி இழுக்க வேண்டும். முதுகுப் பகுதி தட்டையாகி முதுகு நாரிப்பகுதி ஒரே தளத்தில் வரும் வரை கீழ் நோக்கி அழுத்தவும். இவ்வாறு சில செக்கன் செய்து மீண்டும் செய்தல் வேண்டும்.

### 04. வயிற்றுத் தசைகளுக்கான பயிற்சி.

படத்தில காட்டியவாறு நிமிர்ந்து படுத்தல் வேண்டும். மூச்சை வெளியே விடவும். வயிற்றுத் தசையை இறுக்கி, தலையைத் தூக்கி இரு கைகளினாலும் முழங்காலைத் தொடவும், சில மணித்துளிகள் இவ்வாறு வைத்திருந்து பின் பழைய நிலைக்கு வரவும். அதே போல் மூச்சை வெளியே விடவும். வயிற்றுத் தசையை இறுக்கித் தலையைத் தூக்கி சில செக்கன்கள் வைத்து பின் பழைய நிலைக்கு செல்லவும். மறுபக்கமும் இதே போல் மறுபக்கமும் செய்யவும்.

---

# பெண்களின் மாதவிலக்கு பிரச்சினை



பெண்களுக்கு மாதவிலக்கு வலி பல்வேறு காரணங்களால் ஏற்படலாம்.

மாதவிலக்கு வலியை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

### காரணமற்ற மாதவிலக்கு வலி

50 சதவிகிதத்தினருக்கு இந்த ரக வலிதான் உண்டாகிறது.இவர்களில் 15 சதவிகிதத்தின ருக்கு வலி கடுமையாக இருக்கும். பெரும் பாலும் இள்ம் பெண்களுக்கு இந்த ரக வலிதான் ஏற்படுவதுண்டு. இவர்கள் திருமண மாகி கர்ப்பம் தரித்தபின் இந்த வலி இல்லாமல் கூடப் போகலாம். இந்த வலி உண்டாக முக்கிய காரணமாகத் திகழ்வது புரோஸ்டகிலண்டின் எனும் ஹோர்மோன். இது மாதவிலக்கின் போதும் பிரசவத்தின் போதும் கருப்பையின் தசைகளை அழுத்தி சுருங்கவைப்பது '.

கருப்பை இவ்வாறு அழுத்தி சுருங்கும்போது அதன் சுவற்றின் தசைகளின் தமனிகளில் இரத்த ஓட்டம் குறைவு படுவதால் இந்த வலி உண்டாகிறது. மாதவிலக்கின்போது சினை முட்டை வெளியேறும் போதும் சிலருக்கு வலி உண்டாகும்.

மாதவிலக்கின்போது இரத்தமும், உடைப் பட்ட கருப்பையும் உட்சுவரின் பகுதிகளும் குறுகலான கருப்பை வாயின் வழியாக வெளியேற நேர்ந்தால் வலி உண்ட்ாகும். கருப்பை பின்னோக்கி சாய்ந்து அமைந்திருந் தால் வலி உண்டாகும். போதுமான உடற் பயிற்சி இல்லையெனினும் வலி ஏற்படும்.

அதிகமான மன உளைச்சலினாலும் வலி ஏற்படலாம். மாதவிலக்கு வந்தபின் வலி, அசதி காரணமாகவும் மனஉளைச்சல் அதிகமாகி எரிச்சல், கோபம், படபடப்பு போன்றவையும் பெண்களிடம் காணப்படலாம்.ஒரு சிலருக்கு மாதவிலக்கு வருவதற்கு முன் ஒரு சில நாட்களிலேயே அதிகே கோபம், ஆத்திரம், ஆவேசம் , சோகம், அழுகை போன்ற மனநிலை மாற்றங்கள் உண்டாகி மாதவிலக்கு வந்தபின் குறையும்.

### வேறு காரணத்தினால் ஏற்படும் மாதவிலக்கு

இவற்றில் முக்கிய காரணங்கள் வருமாறு:

### தசைநார்க் கட்டிகள்

இந்த கட்டிகள் கருப்பைக்குள் வளர்பவை. இவை புற்று நோய் வகை அல்ல. இந்த கட்டிகள் இருந்தால் அதிகமான இரத்தப் போக்கும், அதிக வலியும் உண்டாகும். அதோடு அடி வயிறு வலி , அடிக்கடி சிறுநீர் கழித்தல், மலச்சிக்கல், இடுப்பு வலி போன்ற இதர பிரச்சினைகளும் எழும். இந்த கட்டி உள்ளதை ஸ்கேன் பரிசோதனை மூலமாகக் கண்டறிந்த பின்பு அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்படவேண்டும்.

### பாலியல் நோய்கள்

இவற்றில் கொனோரியா, சிபிலிஸ், ஹெர்ப்பீஸ், எச். ஐ . வி . போன்ற நோய்கள் அடங்கும். இந்த நோய்கள் கருப்பையிலும், கருப்பை வாயிலிலும் அழற்சியும் புண்ணும் உண்டாவதால் வலி ஏற்படும். இவற்றை இரத்தப் பரிசோதனைகள் மூலமும், வெள்ளைப் போக்கு பரிசோதனை மூலமா கவும் கண்டறிந்து சிகிச்சை மேற்கொள்ள லாம். இவை அனைத்துமே உடல் உறவின் மூலம் பரவுபவை என்பது குறிப்பிடத் தக்கது.

### புற கருப்பை வளர்ச்சி

கருப்பையின் உட்சுவர் போன்ற திசுக்கள் கருப்பைக்கு வெளியில் வேறு பகுதிகளில் வளர்வதை புற கருப்பை வளர்ச்சி என்கிறோம். இவை கருப்பை உட்சுவர் போலவே வளர்ச்சியுற்று மாதம் ஒரு முறை உடைந்து இரத்தப் போக்கை வெளியேற்றும். இந்த இரத்தம் அப் பகுதிலேயே தங்க நேரிடும். இதனால் கடும் அடி வயிற்று வலி உண்டாகும். கரு தரிக்காத பெண்களில் 20 முதல் 80 சத விகித பெண்களுக்கு இப் பிரச்சினை இருக்கும். நீண்ட நாட்கள் அடி வயிறு வலி உள்ள பெண்களில் 80 சத விகிதத்தினருக்கும் இதுவே காரணமாகலாம். லேப்பரோஸ்கோப்பி கருவி மூலம் இதைக் கண்டு பிடித்து அக் கருவியின் உதவியோடு இவற்றை அகற்றலாம்.

கருப்பை ,சினைப்பை கருப்பை நுழைவாயில். சினைக் குழாய் ஆகிய உறுப்புகளில் அழற்சி. இந்த உறுப்புகளில் கிருமிகள் தொற்றினால் அழற்சி உண்டானால் அதனால் வீக்கம் உண்டாகி வலியை உண்டுபண்ணும்.

### சினைப்பைக் கட்டிகள்

சினைப் பையில் நீர்க் கட்டிகளும் இதர புற்று நோயற்ற கட்டிகளும் வளரலாம். இதனாலும் வலி உண்டாகலாம். இவற்றை ஸ்கேன் மூலம் கண்டு அறுவை சிகிச்சை மூலம் அப்புறப் படுத்தலாம்.

### கருத்தடைச் சாதனங்கள்

கருத்தடைச் சாதனங்கள் பொருத்தப் பட்டுள்ள சில பெண்களுக்கு மாதவிலக்கின் போது கடும் வலி உண்டாகலாம். இது தவிர்க்க இயலாதது.

மாதவிலக்கு வலியின் இதர அறிகுறிகள் :

குமட்டல், வாந்தி, வயிற்றுப்போக்கு, உடல் வலி

மாதவிலக்கு வலி தொடங்கியதும் 24 மணி நேரத்தில் வலி அதிகமாகி 3 நாட்களில் குறையும். இரத்தம் கட்டியாக வெளியேறினால் வலி அதிகரிக்கும்.

மாதவிலக்கு வலிக்கான சிகிச்சை முறைகள்:

ஸ்டீராய்ட் இல்லாத வலி நிவாரணி மாத்திரைகள். அதிகமான இனிப்பு, கோப்பி போன்றவற்றைத் தவிர்க்கலாம். வயிற்றுப் பகுதியில் சூடான ஒத்தடம் தரலாம்.

வலியை உண்டுபண்ணும் காரணம் கண்டுபிடித்தபின் அதை அறுவை சிகிச்சை மூலம் அப்புறப்படுத்தலாம்.

# இரும்புக் கோட்டை முரட்டுச் சிங்கங்கள்

அன்ரூ இக்னேஷ்




T 20 உலக கிண்ணம் ஆரம்பிப்பதற்கு முன்னர் மேற்கிந்தியத்தீவுகள் அணியை யாரும் அவ்வளவாக கணக்கெடுக்கவில்லை. அடுத்த உலகக் கிண்ணம் யாருக்கு என பத்திரிகைகள் வெளியிட்ட ஊகப்பட்டியலில் முன்வரிசையில் மேற்கிந்தியத்தீவுகள் இருக்கவுமில்லை. ஏதோ ஒப்புக்கு சிலர் நான்காவதோ ஐந்தாவதோ இடம் மேற்கிந்தியர்களிற்கு வழங்கினார்கள். வெளிப்படையாக சொன்னால், பங்களாதேஷ் பற்றிய எதிர்பார்ப்பிருந்த அளவிற்கு பெரும்பாலானவர்களிற்கு மேற்கிந்தியத்தீவுகள் பற்றிய எதிர்பார்ப்பு இருக்கவில்லை. எப்பொழுதாவது ஒரு போட்டியில் கிறிஸ் கெயில் சன்னதம் கொள்வார். பெரும்பாலும் அது லீக் போட்டியாக இருந்துவிடும். பிறகென்ன, அடுத்தடுத்த போட்டிகளில் மண்கவ்வி, அரையிறுதிக்கே நொண்டியடிப்பதுதான் மேற்கிந்திய கிரிக்கெட்டின் எழுதப்படாத



போர்முலா என்பதுதான் கிரிக்கெட்டையே மூச்சாக கொண்டவர்களின் கணிப்பாக இருந்தது.

உலககிண்ணம் வெல்லலாமென எதிர்பார்க்கப்பட்ட அணிகளில் முன்வரிசையில் அவுஸ்திரேலியா, இந்தியா, நியுசிலாந்து, இங்கிலாந்து என்பனதான் இருந்தன. ஏதாவது ஆச்சரியம் நடந்தால் மேற்கிந்தியாவில் கெயில் சன்னதமாடினால், டில்சான் வெளுத்து வாங்கினால் அவர்கள் சார்ந்த அணிகளும் இறுதிச் சுற்றுக்கு வருமென்றார்கள்.

ஆனால், இறுதியில் நடந்தது வேறு கதை. எதிர்பார்க்கப்பட்ட அணிகள் அனைத்திற்கும் சொல்லியடித்துக் கொண்டு இறுதிப் போட்டிக்கு வந்த மேற்கிந்தியா, அதகள ஆட்டமாடி கிண்ணத்தை கைப்பற்றியுள்ளது.

இறுதி ஓவரில் அடுத்தடுத்த நான்கு மெகா சிக்சர்கள் அடித்து, “கிண்ணத்தை எடு கொண்டாடு” என மேற்கிந்தியர்கள் எடுத்தது டபுள் ட்ரீட். முதல் ட்ரீட் கொடுத்தது மேற்கிந்தியத்தீவுகளின் பெண்கள் அணி. பெண்கள் T 20 உலகக்கிண்ணத்தை வென்றதும் மேற்கிந்தியத்தீவுகள்தான். இதனால் முழு மேற்கிந்தியத்தீவுகளுமே உற்சாகக் கொண்டாட்டத்தில் இருக்கிறது.

ஆடவர், மகளிர் என இருபிரிவுகளிலும் மேற்கிந்தியத்தீவுகள் கிண்ணம் வென்றதுதான் கிரிக்கெட் உலகின் பரபரப்பான பேசுபொருளாக மாறியுள்ளது. முன்னர் ஒருகாலத்தில் உலகத்தின் கிரிக்கெட் வல்லரசாக இருந்த மேற்கிந்தியா பின்னர் நொந்து நூடில்ஸான கதை உலகறிந்தது. வடிவேலுவை முட்டுச் சந்துக்குள் வைத்து அடித்துவிட்டு போன் போட்டு அடுத்த குறுப்பிடம் கொடுத்து அடிகொடுப்பதை போல மற்றஅணிகள் மேற்கிந்தியாவை போட்டு துவைத்தெடுத்த கதைதான் அண்மைக்காலம்வரை நீடித்தது.

சந்தர்போல், கிறிஸ் கெயில், சர்வான், கூப்பர், சாமுவேல்ஸ் என சில நட்சத்திரங்கள் தோன்றினாலும் ஒரு அணியாக மேற்கிந்தியா ஆதிக்கம் செலுத்துபவர்களாக உருமாற முடியாமலிருந்தது. எப்பொழுதாவது மரணமாஸ் காட்டினாலும், பொதுவில் சொதப்பிக் கொண்டுதானிருந்தனர். எல்லா விமர்சகர்களின் வாயையும் ஒரேநாளின் இரண்டு உலககிண்ணங்களின் மூலம் அடைத்துள்ளனர் மேற்கிந்தியவீரர்கள்.

முட்டுச்சந்தில் அடிவாங்கிக்கொண்டிருந்த அணி முரட்டு அடி அடித்து கிண்ணம் வென்றதன் காரணங்கள் என்ன? இதோ அந்த பட்டியல்.

## கதிகலங்கலடி

நடந்தது T 20 உலககிண்ணம். யார் காட்டடி, கதிகலங்கலடி ஆட்டம் ஆடுகிறார்களோ அவர்கள் கிண்ணம் வெல்லலாம். இதுதான் முதல்காரணம்.

ஆனால் இந்த ஒரு தத்துவத்தை வைத்து மேற்கிந்தியாவின் வெற்றியை குறைத்து எடைபோடவும் முடியாது. காட்டடி அடிக்கிறோம் பேர்வழியென சிம்பாவேயெல்லாம் கிண்ணம் வெல்ல முடியாது. கிரிக்கெட் அதிகமும் விஞ்ஞான பூர்வம் மிக்கவிளையாட்டாகிவிட்டது. விளையாட்டு முறைகளில் அதிக தொழில்நுட்பம் கலந்துவிட்டது. தொடர்ந்து ஆடப்பட்டதன் பரிமாண வளர்ச்சியது. டெஸ்ட் ஆடுவதின் நேர்த்தி, ஷொட் தேர்வு, பந்தை விரட்டும் லாவகம் போன்ற மட்டையாளர்களின் வித்தைகள், பந்தை திருப்புவது, மட்டையாளரை ஓட்டம்பெறாமல் கட்டுப்படுத்துவது, பொறி வைத்து வலையில் வீழ்த்துவது போன்ற பந்துவீச்சாளர்களின் தந்திரங்கள் என எல்லாவற்றின் “பார்ஸ்ட் புட்” கலவைதான் T 20. அதனால் கண்மண் தெரியாத விளையாட்டென அதனை வகைப்படுத்த முடியாது. ஆட்டத்தில் நேர்த்தி இருக்கத்தான் வேண்டும். ஆனால் அதனை அதகளப்படுத்த தெரிந்திருக்க வேண்டும். மற்ற அணிகளை விட மேற்கிந்தியர்களிற்கு அது கைவரப் பெற்றது முதல் சாதகம்.

## மரண ஹிட்டிங்

T 20 என்றாலே ஹிட்டிங்தான். நல்ல ஆஜானுபாகுவாக தோற்றம். தோள்மூட்டு பலம். பந்தை துல்லியமாக கணிக்கும் திறன். இதெல்லாம் வாய்த்தால் எதிரணி பீல்டர்கள் மைதானத்திற்குள் வானத்தைப் பார்த்துக் கொண்டு நிற்பது மட்டும்தான் வேலையாகும். மேற்கிந்தியாவுடன் அரையிறுதியில் மோதிய இந்தியர்களுக்கும், இறுதியில் மோதிய இங்கிலாந்துக்காரர்களுக்கும் இதுதான் நடந்தது.

உலககிண்ணத்தையே அமர்களமாகத்தான் ஆரம்பித்தது. இந்த தொடரின் முதல்போட்டியிலும், இறுதிப்போட்டியிலும் இங்கிலாந்தைத்தான் சந்தித்தார்கள் மேற்கிந்தியர்கள். இரண்டிலும்வெற்றி. இடையில் ஆப்கானுடன்தான் சொதப்பல் ஆட்டம் ஆடினார்கள்.



மற்ற எல்லா போட்டிகளிலும் பந்துவீச்சாளர்களை தெறிக்கவிட்டார்கள். அரையிறுதிப் போட்டியில் இந்தியாவின் நம்பிக்கை பந்துவீச்சாளர்கள் எல்லோரையும் நையப்புடைத்தார்கள். ஒன்று தொடக்கம் பதினொன்று வரையான எல்லா வீரர்களும் மிரட்டல் ஹிட்டர்களாக இருந்ததுதான் மேற்கிந்தியாவின் பலம். அவுஸ்திரேலியாவில் கூட வரிசையாக . இத்தனை ஹிட்டர்கள்



கிடையாது.

## இளமை புதுமை

தென்னாபிரிக்கா அணி கிரிக்கெட் உலகத்தின் முக்கிய அணியாக சில பத்து வருடங்களாக இருந்து வருகிறது. ஆனால் அதனால் ஏன் ஒருமுறை கூட உலககிண்ணம் ஒன்றையும் கைப்பற்ற முடியவில்லை? இதற்கு சரியான பதில், அந்த அணி இறுக்கமான அணி. நன்றாக ஒழுங்கமைக்கப்பட்ட, இராணுவபாணி அணி. அந்த அணியின்செயற்பாடுகள், திட்டங்கள் எல்லாம் ஏற்கனவே திட்டமிடப்பட்டவை. இராணுவ அணி வகுப்பை போன்றதுதான். ஆனால் நவீன கிரிக்கெட்டில் இந்த உத்தி காலாவதியானது. மைதானத்திற்குள் புதிய கற்பனைவளம் மிக்க முடிவுகள், பரிசோதனைகள்தான் வெற்றிக்கு காரணமானவை.

இம்முறை ஆடிய பெரிய அணிகள் எல்லாம் நிலையான தன்மையை பெற்றுவிட்டவை. ஆனால் ஹிட்டர்கள் நிறைந்த மேற்கிந்தியாவின் பரத்வைற், லெண்டில் சிம்மன்ஸ், சார்லஸ், ரஸல் பற்றி எந்த அணிகளும் கவனமெடுக்கவில்லை. ஆளாளுக்கு ஒவ்வொரு போட்டியில் அணியை கரை சேர்க்க இறுதியில் கிண்ணம் மேற்கிந்தியாவின் கைகளில்.

மற்ற அணிகளை விட இளைய வீரர்கள் பொறுப்பாகசெயற்பட்டது மேற்கிந்தியாவில் மட்டுமே. மற்ற பெரிய அணிகள் எல்லாப் போட்டிகளிலும் ஏதோ ஒரு சில வீரர்களை மட்டுமே நம்பியிருக்க, மேற்கிந்தியா மட்டுமே பதினொரு வீரர்களையும் நம்பியிருந்தது.

# களைப்புக்கு இடம்கொடுத்தால் சோம்பேறியாக்கும்




தோற்றுப் போவோமா என்ற சிந்தனை மனதில் இருக்குமானால் கண்டிப்பாக தோற்றுப் போவோம். ஓடிக்கொண்டே இருக்கவேண்டும். அப்பொழுதுதான் மேலும் மேலும் ஓடமுடியும். களைப்புக்கு இடம் கொடுப்போமானால் எம்மை சோம்பேறி ஆக்கிவிடும். யாழ்ப்பாணம் செட்டித்தெருவில் அமைந்த லக்ஸ்சரிஸ்ரார் (lux etoiles) முதலாளி வெற்றிவேலு ஜெயேந்திரன் தீபம் வெற்றிப் படிக்கட்டுகளுக்காக வழங்கிய நேர்காணல்.

1978 ஆம் ஆண்டு பிரான்ஸ் போய் அங்கே படித்து கட்டடம் கட்டும் நிறுவனத்தில் 3 வருடங்கள் தொழில் செய்து வந்தேன். இந்த அனுபவத்தில் பின்னர் அங்கு நானே நிறுவனத்தை ஆரம்பித்து 10 வருடங்களுக்கு மேல் நடத்தினேன். எனது நிறுவனத்தில் 2500 பேருக்கு வேலைவாய்ப்பை வழங்கினேன்.

படித்து படித்து வேலை செய்ததால் இலகுவாக தொழிலில் வளர முடிந்தது. நான் முதலாளியாக இருந்தாலும் தொழிலாளியாக



வேலைசெய்ததால் இலகுவாக என்னால் வளர முடிந்தது. கடவுள் பக்தி என்னிடம் இல்லை எனது அம்மாதான் எல்லாம். அதனால் அம்மாவின் விருப்பத்துக்கு ஏற்ப பிரான்சில் ஒரு சிவன் கோயிலைக் கட்டியுள்ளேன்.

இலங்கையில் இருந்து அங்கு வந்து விசா இல்லாமல் கஷ்ரப்பட்ட தமிழ் இளைஞர்கள் 600 பேருக்கு எனது நிறுவனத்தில் வேலைவாய்ப்பை வழங்கினேன். அதனால் சட்டம் என்மேல் பாய்ந்தது. தொடர்ந்து அங்கு என்னால் நிறுவனத்தை நடத்த முடியாமல் போனதால் எனதுதாய் மண்ணுக்கே திரும்பி வந்தேன். வரும் போது பெரிதாக பணம் கொண்டு வரவில்லை. ஒரு இலட்சம் யூரோவுடன் தான் வந்தேன். கையில் பணம் இல்லாமல் தொழில் செய்துபணம் சம்பாதித்து முதலாளியான எனது முன்னேற்றத்துக்கு பணம் ஒருதடையல்ல. அதை எப்படி எடுப்பது என்பது தொழிலாளியாக இருந்து முதலாளியாக வந்த எனக்கு கைவந்த கலை.

அதனால் இந்தக் கொட்டலின் முதலாளியும் நான் தான். கொட்டலின் பிரதான சமையல்காரனும் நான் தான். அபிவிருத்தியடைந்த நாடுகளில் முதலாளிகள் தொழிலாளியாகவும் பணியாற்றுவதால்தான் அந்தநாடுகள் மேலும் மேலும் அபிவிருத்தி அடைந்து வருகிறது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை முதலாளிகளாக இருக்கும் பலருக்கு தொழில் தெரியாது. இதனால் அவர்கள் முன்னேற முடியாமல் இருக்கிறார்கள்.

இந்தக் கொட்டலில் வழங்கப்படும் உணவாக யாழ்ப்பாணத்தில் அழிந்துபோகும் உணவுவகையான தேங்காய் நண்டுக்கறி அரைத்த கறி ஒடியல் பிட்டு போன்ற உணவுவகைகளை வழங்குகின்றேன்.

இந்தப் பணத்தை வைத்துக் கொண்டு எனக்கு இருந்த 6 அறையுள்ள வீட்டை வாடகைக்கு விட்டு பின்னர் 8 அறையாக்கி பின்னர் 24 அறையாக்கி ஹோட்டலை நடத்துகின்றேன். இந்த வருமானத்தை வைத்து அதனுடன் சேர்த்து பெரியஅளவில் 24 அறையுள்ள 10 மாடிகள் உள்ள கட்டடத்தைக் கட்டிக் கொண்டிருக்கிறேன். கார்கில்ஸ்சில் பீசாகட் திறந்திருக்கிறேன். சுற்றுலாவுக்கு போக விரும்புகின்றவர்களுக்கு உல்லாச பஸ் ஒன்றையும் விட்டிருக்கிறேன்.

"போதுமென்ற மனமே பொன் செய்யும் மனம்" என்று சொல்கிறார்கள் ஏன்? உனக்கு எது கிடைக்கிறதோ அதற்குள்ளே நீ வாழ்ந்து கொண்டு அதை வைத்து உன்னை வளர்க்க வேண்டும். பொறாமை தனிப்பட்ட கோபம் போன்ற காரணங்கள் ஒருவரின் தொழில் வளர்ச்சிக்கு தடையாக இருக்கும். ஹோட்டல் ஒன்று கட்டப் போரியல் என்றால் முதலில் அருகில் இருக்கும் வீட்டுக்காரன் மாநகரசபைக்கு முறைப்பாடு செய்வான். இதனால் கொட்டலைக் கட்ட காலதாமதம் ஏற்படும். வங்கிகளைப் பொறுத்தவரையில் கலைச்சுக் கலைச்சு கடன் கொடுக்கும். பின்னர் கலைச்சுக் கலைச்சு பறிக்கும். தொழில்கடனால் தொழிலாளர்கள் பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருகிறார்கள்.

என்னைப் பொறுத்தவரை தொழிலில் பிரச்சினை என்பது சக்கரைப் பொங்கல் போன்றது. பிரச்சினை இல்லாமல் தூங்கமாட்டேன். பிரச்சினை இல்லாமல் எழமாட்டேன். பிரச்சினை இருந்தால்தான் தொழிலில் முன்னேறமுடியும். ஏனெனில் பிரச்சினையை எதிர்கொள்ள எதிர்கொள்ள அந்தப் பிரச்சினையில் பழக்கப்பட்டு பயம் கொள்ளாது முன்னோக்கி நகரமுடியும்.






**வான் வாடகைக்கு**

அகில இலங்கை சுற்றுலா, போக்குவரத்து வான் வாடகைக்கு உண்டு. **L.K. Net Work**
**Tel : 077 022 2232 | 077 0222260**

**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். **Guna Best Pc**
**Tel : 077 908 6737**

**வீடு வாடகைக்கு**

கோபாயில் சிறு குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு உண்டு.
**Tel : 0723063727**

**காணி விற்பனைக்கு**

மானிப்பாய் கனகசபை வீதியில் செல்லமுத்து விளையாட்டு மைதானத்திற்கு அருகில் அமைந்துள்ள 10 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு.
**Tel : 076 638 5626**

**காணி விற்பனைக்கு**

முத்திரைச்சந்தி, கல்விக்கந்தோர் அருகில் செல்வர் வீதியில் 7 பரப்பு காணி முழுவதும், பிரித்தும் 2½, 2½, 2 பரப்புகளாக பிரித்தும் கொடுக்கப்படும். விலை பரப்பு 15 லட்சம்.
**Tel : 077 650 8376**

**திருமண சேவை**

சூரியன் திருமண சேவை,
மனோகரா சந்தி, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**திருமண சேவை**

வரன் தேடுகிறீர்களா? இலவசமாக பதிவு செய்து கொள்ளுங்கள்,

ராஜீ திருமண சேவை
சிவன் வீதி, ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

இணையத்தில் பதிவு செய்திட:
**Tel : 021 222 4662**

தமிழர்களின் நம்பிக்கை பெற்ற வெற்றிகரமான திருமண இணையத்தளம்
**www.jaffnamatrimony.com**

**நீங்களும் எழுதலாம்**

வரலாற்றில் முதன் முறையாக 'திராவிடம்' என்னும் சிற்றிதழ் வருகைதர இருக்கிறது. அதற்கு உங்களிடம் இருந்து ஆக்கபூர்வமான எழுத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

பாடசாலை, பல்கலைக்கழக இளையோரிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

11\21, திருமகள் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரியர் ச. திருச்செந்தூரன்
**Tel : 077 050 7391**

**கார் வாடகைக்கு**

திருமண கார் வாடகைக்கு உண்டு.
**Tel : 077 248 7234**

**தங்குமிடம்**

நாளாந்த அறை வாடகைக்கு உண்டு சலுகைக் கட்டணத்தில், மிலேனியம் உல்லாச பயணிகள் விடுதி மற்றும் உணவகம்.
**Tel : 077 601 6310**







# பேசும் பேனா

உடுவை.எஸ்.தில்லைநடராசா.

பரீட்சைகள் முடிவடைந்து விடுமுறைக்காக பாடசாலை மூடப்படும் தினம். வகுப்பாசிரியர் மாணவர் தேர்ச்சி அறிக்கைப் பத்திரங்களை மாணவர்களிடம் கையளித்தார். 5 ஆம் ஆண்டு வகுப்பில் அதிக புள்ளிகள் பெற்ற வசந்தனை வகுப்பாசிரியர் பாராட்டி அவனது அறிக்கைப் பத்திரத்தைக் கொடுத்தார்.

வசந்தனுக்கு அதிக புள்ளிகள்! எல்லாப் பாடங்களிலும்... எல்லாப் பாடங்களிலும் வசந்தனுக்கு அதிக புள்ளிகள்!! எல்லாப் பாடங்களிலும் அதிக புள்ளிகள் வசந்தனுக்கு. வசந்தனுக்கு அதிகபுள்ளிகள், எல்லாப் பாடங்களிலும், எல்லாப் பாடங்களிலும் வசந்தனுக்கு அதிகபுள்ளிகள், எல்லாப் பாடங்களிலும் அதிக புள்ளிகள் வசந்தனுக்கு.

வகுப்பாசிரியர் வசந்தனைப் பாராட்டினார். வகுப்பறைத் தோழர்களும் வசந்தனைப் பாராட்டினார்கள். பள்ளி மாணவரெல்லாம் வசந்தனைப் பாராட்டினார்கள். எல்லா ஆசிரியர்களும் வசந்தனைப் பாராட்டினார்கள். கல்லூரி அதிபரும் வசந்தனைப் பாராட்டினார்.

பாராட்டுக்கள் குவிந்தன. குவிந்தன பாராட்டங்கள். வசந்தனுக்கு பாராட்டுக்கள் குவிந்தன. வசந்தன் வீட்டுக்குச் சென்றான். தேர்ச்சி அறிக்கையை எல்லோருக்கும் காட்டினார். எல்லாப் பாடங்களிலும் வசந்தனுக்கு அதிகபுள்ளிகள் அப்பா வசந்தனைப் பாராட்டினார். அம்மாவும் வசந்தனைப் பாராட்டினார். அண்ணாவும்அக்காவும்வசந்தனைப்பாராட்டினார்கள். பாராட்டிப் பல பரிசில்களும் வழங்கினார்கள்.

அப்பா கொடுத்த பரிசு அற்புதமானது., அப்பா அழகான பேனாவைப் பரிசளித்தார். அது விலை உயர்ந்த வெளிநாட்டுப் பேனா., அந்தப் பேனா அழகாக எழுதும் பேனா.

பேனாவின் பின்புறமுள்ள பொத்தானை அமத்தினான். அந்தப் பேனா சரியான நேரம் காட்டும், அந்தப் பேனா அன்றைய தினத்தையும் காட்டும்., அந்தப் பேனா அன்றைய திகதியையும் காட்டும்., அது மட்டுமல்ல., அந்தப் பேனா. பேனாவின் பின்புறமுள்ள பொத்தானை அமத்தினால் நேரத்தை ஆங்கில மொழியில் சொல்லும். அன்றைய நாளையும் ஆங்கில மொழியில் சொல்லும்., அன்றைய திகதியையும் ஆங்கில மொழியில் சொல்லும். அப்பா பரிசாகக் கொடுத்த போனா அற்புதமான பேனா. அழகான அந்தப் பேனா பேசும் பேனா.

அந்தப் பேனா பேசும். அப்பா தந்த பேனா! அப்பா தந்த பேனா! அழகான பேனா! ஆங்கிலம் பேசும் பேனா! பாடினான்., ஆடினான்., துள்ளிக் குதித்தான். வசந்தன் ஆடினான் பாடினான் துள்ளிக்குதித்தான். விடுதலை முழுவதும் ஆனந்தத்தால் துள்ளிக்குதித்தான். விடுமுறையின் பின் மீண்டும் பாடசாலை ஆரம்பமானது வசந்தன் பள்ளிக்கூடம் வந்தான். எல்லோரிடமும் பேசும் பேனாவைக் காண்பித்தான்.

அப்பா தந்த பேனா! அப்பா தந்த பேனா! அழகான பேனா! ஆங்கிலம் பேசும் பேனா! வசந்தன் ஆடினான் பாடினான் துள்ளிக்குதித்தான். கல்லூரி மணி அடித்தது., ஆசிரியர் வகுப்பிற்கு வந்தார். பாடம் ஆரம்பமாகியது. எல்லோரும் பாடத்தில் கவனம் செலுத்தினார்கள். வசந்தன் பக்கத்து மேசையைப் பார்த்தான்., பக்கத்து மேசை ஆனந்தனுடையது., ஆம்! அடுத்த மேசை ஆனந்தனுடையது. ஆனால் ஆனந்தன் இருக்கவில்லை., ஆனந்தனின் மேசையில் புத்தகங்களும் சிறிய பென்சில் ஒன்றும் இருந்தது. ஆனந்தன் வகுப்பறையில் இருக்கவில்லை. வசந்தன் அக்கம் பக்கம் பார்த்தான்., வசந்தனை யாரும் பார்க்கவில்லை. மெதுவாக அந்தச் சிறிய பென்சிலை எடுத்து தனது காற்சட்டைப் பையினுள் மறைத்தான்.

ஆனந்தன் தண்ணீர் பருகிவிட்டுத் தாமதமாக வீட்டுக்கு வந்தான். தாமதமாக வந்த ஆனந்தை ஆசிரியர் கடிந்து கொண்டார். கவலையுடன் ஆனந்தன் தனது பென்சிலைத் தேடினான். மேசையில் தேடினான். புத்தகங்களிடையே தேடினான். எல்லா இடமும் பென்சிலைத் தேடினான் பென்சில் கிடைக்கவில்லை., பென்சில் கிடைக்கவே இல்லை. ஆனந்தன் அழுதான் பென்சிலைக் காணவில்லை. விம்மி விம்மி அழுதான் பென்சிலைக் காணவில்லை.

வசந்தன் மனதுக்குள் சிரித்த வண்ணம் தன் சட்டையில் கையை விட்டுப் பார்த்தான். வசந்தன் திடுக்கிட்டான். பேனாவைக் காணவில்லை., பேசும் பேனாவைக் காணவில்லை., அழகான பேசும் பேனாவைக் காணவில்லை., அற்புதமான பேசும் பேனாவைக் காணவில்லை., தேடினான்., பேசும் பேனாவைத் தேடினான், எல்லா இடமும் தேடினான். பேனா கிடைக்கவில்லை.

இடைவேளை நேரத்துக்கான மணி அடித்தது. வசந்தன் தண்ணீர் குடிக்க குழாயருகே சென்றான். மணலில் ஏதோ ஒரு பொருள் மின்னியது. விரைந்து சென்று மணலைக் கிண்டினான். தொலைந்து போன பேனா மணலில் புதைந்து இருந்தது. பேனாவைக் கையிலெடுத்து பொத்தானை அழுத்தினான்.

பேனா பேசியது...

"அடுத்தவன் பொருளுக்கு ஆசைப் படாதே..." "அடுத்தவன் பொருளுக்கு ஆசைப் படாதே..." வசந்தன் ஆனந்தனிடம் சென்றான். ஆனந்தனின் பென்சிலை அவனிடம் கொடுத்தான். ஆனந்தனிடம் மன்னிப்பும் கேட்டான். இனி ஒரு போதும் பிறர் பொருளுக்கு ஆசைப் படக் கூடாது என்று முடிவும் எடுத்தான்.

வசந்தன் பேனாவின் பொத்தானை அமத்தினான். பேனா பேசியது...

"அடுத்தவன் பொருளுக்கு ஆசைப் படாதே... உன்னிடம் உள்ள பொருளையும் இழந்துவிடுவாய்."

"அடுத்தவன் பொருளுக்கு ஆசைப்படாதே உன்னிடம் உள்ள பொருளையும் இழந்து விடுவாய்."

# சூடான பிரதேசம்

மெடிடெரேனிய பகுதியின் பல இடங்கள் உலகில் வேறு எங்கும் காண முடியாத தாவரங்களை கொண்டுள்ளன. புவியியல் நிலையின்மை, இவற்றின் சிறிய இட அமைப்பு ஆகியவற்றால் இவை சூடான பகுதிகளாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இவை உயிரின வாழ்தலை பற்றி ஆராயும் அமைப்பினரால் மிக முக்கியமான இடங்களில் ஒன்றாக குறிக்கப்பட்டுள்ளன. உலகின் முக்கியமான சூடான பகுதிகளில் ஒன்று மெடிடெரேனிய கடல் பகுதியை ஒட்டிய நிலப்பகுதியாகும். இங்கே வேறு எங்கும் காண முடியாத 13 ஆயிரம் தாவர வகைகள் காணப்படுகிறது. வெப்ப மண்டல ஆண்டஸ் பகுதியில் 20 ஆயிரம் தாவர வகைகள் காணப்படுகிறது. அதற்கு அடுத்த இடத்தில் மெடிடெரேனிய பகுதி உள்ளது. இயற்கை பொக்கிஷங்கள். தென்னாபிரிக்க கடலினை ஒட்டிய மெடிடெரேனிய பகுதியில்தான் இதுபோன்ற அரிய வகை தாவரங்கள் காணப்படுகிறது.



செல்வக்குமார்
பிறைவாணன்
தரம் 3,
யாஃ/கோப்பாய்
நாவலர் வித்தியாலயம்

# மிருதுவான இசை கருவி

புல்லாங்குழல் மிகவும் தொன்மையான வரலாற்றையுடைய ஒரு இசைக்கருவி. உலகின் எல்லாப் பாகங்களிலும் காணப்படும் இது துளைக்கருவி வகையைச் சேர்ந்தது.

'குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்'


என்று வள்ளுவர், முதலில் குழலைச் சொல்லிவிட்டுப் பிறகு யாழைச் சொல்லுகின்றார். எது முக்கியமோ அதை முதலில் சொல்லுகின்றார். முருகப்பெருமான் குறிஞ்சி நிலக் கடவுள். குறிஞ்சி நிலத்திலே (மலையிலே) வாழ்கின்ற தெய்வம், மலையிலே விளைகின்ற மூங்கிலை வெட்டி அதைத் துளையிட்டுப் புல்லாங்குழல் வாசித்தாராம் சுப்பிரமணிய சுவாமி.

இந்திய புல்லாங்குழல் சீனப் புல்லாங்குழல் ஜப்பானியப் புல்லாங்குழல் என்று நாட்டுக்கு நாடு புல்லாங்குழல் வேறுபட்டது.

**அமைப்பு**

புல்லாங்குழல், புல் இன வகையான மூங்கில் 'மரத்தினால்' செய்யப்படுகின்றது. இதனால் இதற்குப் புல்லாங்குழல் என்று பெயர் ஏற்பட்டது. இளமையும் மூப்புமின்றி நடுவளர்ச்சியுடைய மூங்கில் மரத்தை வெட்டி நிழலிலே ஓராண்டு காலம் வைத்து அதிலிருந்து குழல் செய்வர். சீரான விட்டமுடைய ஒடுங்கிய மூங்கில் குழாயில், வாயினால் ஊதிச் இசையொலி எழுப்புவதற்காக நுனியில் ஒரு துளையும், விரல்களால் மூடித்திறப்பதன் மூலம் இவ் இசையொலியை வெவ்வேறு சுரங்களாக மாற்றி எழுப்ப உதவும் குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய பல்வேறு துளைகளையும் கொண்ட எளிமையான கருவியாக இது இருப்பதால், சமுதாயத்தின் எல்லாத் தரப்பிலுள்ளவர்களுக்கும் இலகுவில் கிடைக்கக்கூடியதாக இருக்கும் கருவி.

புல்லாங்குழலின் நீளம் 15 அங்குலம் சுற்றளவு 3 அங்குலம்.



இடப்பக்கம் மூடப்பட்டிருக்கும். வலப்பக்கம் திறந்திருக்கும். குழலில் மொத்தமாக 9 துளைகள் உண்டு. வாய் வைத்து ஊதப்படும் முதல் துளைக்கு முத்திரை அல்லது முத்திரைத்துளை என்று பெயர். இத்துளை, மற்ற எட்டு துளைகள் ஒவ்வொன்றுக்கும் நடுவில் உள்ள இடைவெளியை விட சற்றுத் தள்ளி இருக்கும்.

**வாசிக்கும் முறை**

குழலின் 7 துளைகள் மீது 7 விரல்களை வைத்து வாசிக்க வேண்டும். 8 வது கடைசித்துளை பாவிப்பது இல்லை. இடது கை விரல்களில் கட்டை விரலையும், சிறு விரலையும்நீக்கி எஞ்சியுள்ள 3 விரல்களையும், வலது கை விரல்களில் கட்டை விரலைத்தவிர மற்ற 4 விரல்களையும் 7 துளைகளின் மீது வைத்து, முத்திரத் துளைக்குள் வாயின் வழியாகக் காற்றைச் செலுத்தி, துளைகளை மூடித் திறக்கும்போது இசை பிறக்கின்றது.

புல்லாங்குழலின் நீளம், உள்கூட்டின் அளவு கூடும் போது சுருதி குறையும். புல்லாங்குழலில் 7 சுரங்களுக்கு 7 துளைகள் இருந்தாலும் வாசிப்பவரின் மூச்சின் அளவைக் கொண்டே நுட்ப சுரங்களை சரியாக ஒலிக்க முடியும்.



# சட்டவிரோத மீன்பிடி முறையால் பாதிக்கப்படும் திருகோணமலை மீனவர்கள்

வடமலை ராஜ்குமார்

கடலில் உள்ள சிறிய மீன்களையும் இரைகள் வளரக் கூடிய இடங்களையும் அழித்துவிட்டு எதிர்காலத்தில் கடற்றொழில் மேற்கொள்ளும் சந்ததியினர் தமது ஜீவனோபாய தொழிலுக்கு என்ன செய்வார்கள். இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கையில் கடல் வளத்தை நாசம் செய்யும் விசமிகளை கைது செய்து இந்த கடல் வளத்தை பாதுகாக்குமாறு பல்வேறு மக்கள் மயப்பட்ட போராட்டங்களை முன்னெடுத்தும் அது திருகோணமலை மாவட்டத்தை பொருத்த வரை கைகூடவில்லை என தெரிவிக்கிறார் திருகோணமலை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் பியால் கேமசிறி.

திருகோணமலை மாவட்ட மக்களின் பிரதான தொழிலாக காணப்படுவது கடற்றொழிலும் விவசாயமும் ஆகும். கடல் தொழிலே பிரதான வருமானம் தரும் தொழிலாகவும் மாவட்டத்தின் பொருளாதார அடித்தளமுமாக காணப்படுகிறது. திருகோணமலையில் மூவினங்களைச் சேர்ந்த 64 கடற்றொழிலாளர் சங்கங்களின் 12802 மீனவர்கள் கடலை நம்பி வாழ்கின்றனர்.

இந்த நிலையில் ஏனைய மாவட்ட மீன்பிடி முறையில் இருந்து திருகோணமலை மீன்பிடி முறை முற்று முழுதாக வித்தியாசமானது. ஏனைய மாவட்டங்களில் நைலோன் வலை தங்குசு வலை என்பனவற்றினை பயன்படுத்தி மீன்பிடிக்கும்போது மீன்கள் உடனடியாக இறந்து விடும். மேலும் இறந்த நிலையில் அதிகமான மீன்கள் கடல்நீரிலும் இருக்கும். இந்த முறையினால் பிடிக்கும் மீன்களை வட்டார மொழியில் இரத்தம் சுட்டுப்போன மீன்கள் என்பார்கள்.வாறான மீன்கள் சமையலுக்கு சுவையாக இருக்காது என்பார்கள்.

ஆனால் திருகோணமலை மாவட்ட மீனவர்களின் முறை ஆதியில் தமிழர்களால் மேற் கொள்ளப்பட்ட தூண்டில் முலமான மீன்பிடி முறை. சிறிய வகை மீன்களான அயலை, கீரிமீன் சூரையாக இருந்தாலென்ன, சுறா, ஓங்கில், மஞ்சல், சூரை போன்ற பெரிய மீன்களாக இருந்தலென்ன தூண்டில் தொழிலையே பயன்படுத்தி வந்தனர். தமிழர்களின் பாரம்பரியமுறை பரவி தற்போது மூவினத்தவரும் தூண்டில் முறை மீன்பிடியிலேயே ஈடுபடுகிறார்கள். இவ்வாறு தூண்டிலில் பிடிக்கும் மீன்கள் இயல்பாகவே சமையலுக்கு சுவையனவையாக இருக்கும்.



கா.கோகுல்ராஜ்

பிடிக்கும் போது உடலில் காயப்படாமல் இருப்பதனால் எளிதில் பழுதடையாமல் இருக்கும். திருகோணமலை மாவட்ட கடலில் அதிகமான கண்டமேடைகளும் பாறைகளும் காணப்படுவதனால் மீன்கள் பெருகுவதற்கும் இவற்றிக்கு தேவையான கடல் தாவரங்கள் வளர்வதற்கும் அதிகமான வாய்ப்புக்கள் உள்ளது.

இப்படிப்பட்ட வளம் பொருந்திய மாவட்டத்திற்கும் மீன்பிடி முறைக்கும் கடல் வளத்திற்கும் இன்று ஒரு பெரும் ஆபத்து வந்து விட்டது. அந்த ஆபத்துதான் சட்டவிரோத மீன்பிடி முறைகளான சுருக்கு வலை, டைனமோட் போன்ற மீன்பிடி முறைகள். கடலில் உள்ள சிறு மீன்குஞ்சுகள் கூட சுருக்கு வலையில் சிக்குவதனால் மீன்வளம் விரைவில் அழிந்துவிடும் அபாயமுள்ளது. இவ்வாறே டைனமோட் பாவிப்பதனால் சிறிய மீன்கள் அழிந்து போகும். இதனால் ஒவ்வொறு சீசனுக்கும் இந்த இந்த தொழிலை செய்யலாம் என எதிர்பார்த்து தொழில் செய்யும் மீனவர்களின் வீடுகளின் அடுப்பில் பூனை படுக்கும் நிலையை ஏற்படுத்தும்.

கடலில் தொடர்ச்சியாக மீன் உருவாகி வளர்ந்து அது பெருகினால்தான் மீனவர்களின் வாழ்வாதாரம் சீராக செல்லும். ஆனால் இவ்வாறு இயற்கைக்கு மாறாக சட்டவிரோத மீன் பிடி முறைகளின் முலம் மீன்குஞ்சுகள் இறப்பதுடன் இது எவருக்கும் பயனில்லாது போகும். மேலும் டைனமோட் பாவிப்பதனால் கடலினுள் உள்ள பவளப் பாறைகள் சிதைவடைந்து மீன்களின் வாழ்விடங்கள், இரை மற்றும் இனப்பெருக்க சூழல் என்பன அற்றுப் போகிறது. இதனால் மீன்வளம் குறைவடைகிறது.

திருகோணமலை மீனவர்களின் பாராம்பரிய மீன்பிடி முறை தூண்டில் தொழில். அதில் ஒரு நாளைக்கு சராசரியாக 100 கிலோ மீன்பிடித்தால் அவர்களுக்கு சாதாரணமான வருமானம் வரும். ஆனால் 1000 கிலோ மீன் ஒரே நேரத்தில் சுருக்குவலை, டைனமோட்டின் முலம் பிடிக்கபட்டால் மீன்களை கொள்வனவு செய்யும் விலை குறைந்துவிடும். எனவே எவ்வளவு மீனை அங்கீகரிக்கபட்ட முறைகளில் பிடித்தாலும், இறுதியில் செலவு செய்த எரிபொருள் செலவும் இல்லாது வீடு திரும்பும் துர்ப்பாக்கிய நிலையில் இன்றைய திருகோணமலை மீனவர்கள் உள்ளனர்.

எனவே எப்பாடுபட்டாவது இந்த நிலையை மாற்ற வேண்டும் என பொலிசார், மீன்பிடி திணைக்களம் மற்றும் கடற்படையினரின் உதவி கொண்டு எல்லோருக்கும் பாதிப்பைத் தரும் சட்டவிரோத முறையிலான மீன்பிடி முறையை இல்லாமல் செய்து விட வேண்டும் என கிராம மட்டத்தில் உள்ள கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர்கள் முயற்சிசெய்தாலும் அவையும்பாரதூரமான உயிரிழப்புக்களைச் சந்தித்துள்ளது என்றார் திருக்கடலூர் மீனவர் சங்க பிரதிநிதி காளிராஜா கோகுல்ராஜ்.

அவர் தொடர்ந்த இவ்வாறு தனது கருத்தை முன் வைத்தார். இதற்கு நல்ல உதாரணம் திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சல்லி கிராமத்தில் இருந்து கடற்தொழிலுக்காக கடந்த 13.08.2015 இரவு கடலுக்கு மீன் பிடிக்க சென்ற அழகுராசா தங்கரூபன் (வயது28) எனும் இளைஞன் இன்று வரை வீடு திரும்பவில்லை அவர் கடலுக்கு சென்ற படகு மற்றும் அவர் அணிந்திருந்த உடைகள் சில மற்றும் உடைக்கப்பட்ட தொலைபேசி மற்றும் சிம்காட் என்பவற்றை பொலிசார் மற்றும் கிராமத்து மக்கள் கடலில் அவர் சென்ற படகில் இருந்து கண்டெடுத்தள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை கடலுக்கு சென்றவர் திங்கட்கிழமை அதிகாலை 02 மணியளவில் தனக்கு சுருக்கு வலை தொழில் செய்பவர்களால் ஆபத்து என்னை அடித்து கொள்ள போகிறார்கள் உடனடியாக வந்து காப்பாற்றுமாறு தனது நண்பர்களுக்கு தொலைபேசி மூலம் குருஞ் செய்தி அனுப்பியுள்ளார்.அதன் பின் அவருடைய தொடர்பு ரத்து செய்யப்பட்டு அவர் காணாமல் போயுள்ளார்.அவரை கண்டு பிடித்து தருமாறு திருகோணமலை நிலாவெளி பிரதான வீதியை மறித்து ஆறாம் கட்டை எனும் இடத்தில் பொது மக்கள் மற்றும் மீனவர் சங்கங்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். 26.08.2015 காலை 8.30 மணியளவில் ஆரம்பமான இந்த வீதி மறியல் போராட்டமானது 11 மணிவரை இடம்பெற்றது. போராட்டம் நடைபெற்ற நேரத்தில் அதனை நிறைவடைய வைக்க அவ்விடத்திற்கு வந்த பொலிஸ் உயரதிகாரிகளும் அரசியல்வாதிகளும் வந்து பல வாக்குறுதிகளை சொல்லி அந்த போராட்டத்தை நிறைவு செய்த வைத்தனர்.



பியால் கேமசிறி

ஆயினும் அந்த மீனவனுக்கு என்ன நேர்ந்தது என்று கூட அவர்கள் குடும்பத்தார் ஏற்றுக் கொள்ளக் கூடிய விசாரனை இடம்பெறவில்லை என மிகவும் விரக்தியான மன நிலையில் தெரிவித்தார்.

ஜமாலியா கிராமத்தைச் சேர்ந்த மீனவர் பீர்பானுரஷா இர்ஷாத் அவர்கள் இந்த சட்ட விரோத மீன்பிடி முறையினை எவ்வாறாவது நிறத்திவிட வேண்டும் என்ற எண்ணத்தில் பல்வேறு போராட்டங்களிலும் செயற்பாடுகளிலும் தன்னை இணைத்துக் கொண்டவர். இவர் இந்த சட்டவிரோத மின்பிடி முறையால் ஏற்படும் பாதிப்புக்கள் சம்மந்தாக இவ்வாறு தெரிவிக்கிறார்.


சட்டவிரோத மீன்பிடி முறைகளில் ஒன்று லைட்கோஸ் சுறுக்கு வலை இது இரவில் மின் விளக்கு போட்டு சுருக்கு வலையிட்டு மீன் பிடிப்பது இவ்வாறு இரவு நேரத்தில் வெளிச்சம் காட்டினால் சிறிய மீன்களில் மட்டுமல்லாது பூச்சிபுளுக்கள் கடலில் இருந்தாலும் இவையும் மேல் எழுந்து வரும் இதனை சுறுக்கு வலை மூலம் பிடித்தால் சிறிய குஞ்சு முதல் அனைத்தம் அறித்து எடுக்கப்படும் .இச் செயற்பாட்டால் எதிர் காலத்தில் மீன் இனங்களின் வடிவங்களை எமது சந்ததிகளுக்கு போட்டோவில் தான் காட்ட வேண்டும்.இவ்வாறான மீன் பிடி மூலம் நேரடியாக பாதிக்கப்படுபவர்கள் குள்ளா தொழில் செய்யும் மீனவர்கள் மற்றும் நியாயமான முறையில் மின்பிடிப் போரின் மீன்களின் விலை குறைவடையும்.

இவ்வாறான மீன் பிடி முறையை திருகோணமலை மாவட்டத்தில் செய்துவரும் சில பிரதேசங்களாக புல்மோட்டை இறக்கக் கண்டி மற்றும் நிலாவெளி ஜமாலிய போன்ற எமது பகுதி மீனவர்கள் சிலரும் மேற் கொண்டு வருகின்றனர் இதனை கட்டுப் படுத்த வேண்டிய சில அதிகாரிகள் தங்களுடைய சுயலாபத்திற்காக பாரா முகமாக இருக்கின்றமை கவலையளிக்கின்றது என்றார்.

ஏவ்வாறாயினும் மாவட்டத்தில் மட்டு மல்லாது தேசிய ரீதியாக நாட்டின் பொருளாதாரமும் தங்கியுள்ள கடற்றொழிலின் எதிர்காலம் அழிக்கும் இந்த சட்டவிரோத மீன் பிடி முறைகளை உடனடியாக தடுத்து நாட்டின் இயற்கை சம நிலையையையும் கடல் வளத்தையும் பாதுகாத்து எதிர்கால சந்ததிக்கு வழங்க வேண்டியது அரசாங்கத்திற்கும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் பொறுப்பாகும்.



இயற்கையான சூழலில் வவுனியா மற்றும்
முல்லைத்தீவு மாவட்டங்களில் உங்களுக்கு
அழகான இல்லத்தினை அமைத்திட
காணிகள் விற்பனைக்குண்டு...



பண்ணை போடுவதற்கு | தென்னை நடுவதற்கு | வீடு கட்டுவதற்கு

- 1 ஏக்கர் தொடக்கம் உங்கள் தேவைக்கு ஏற்ற அளவு உண்டு.
- 1 ஏக்கர் தொடக்கம் தென்னந்தோப்புக்கள் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் பெற்றுக் கொள்ள முடியும் மற்றும் வீட்டுடன் சேர்ந்த காணிகளும் உண்டு.
- காணிகள் துப்பரவு செய்தல் (டோசர்), கிணறு வெட்டுதல் (பெக்கோ மூலம்) வேலி போடுதல், பண்ணை போடுவதற்கான செற் போடுதல் போன்றவற்றை குறுகிய காலத்தில் செய்துதரப்படும்.







No. 76, 4mile post, Mannar Road, vavuniya. | T.P : 0777 908617 / 0778 002260 | E-mail : thushanthonline@gmail.com



EDEN MOTORS
ஈடன் மோட்டர்ஸ் - வவுனியா
No. 59, Soosaipillaiyarkulam Road, Vavuniya.
Contact : 024 320 1288

இன்றைய இளைஞர்களின் தெரிவு

FZ வாங்கும்போது
இவ் விளம்பரம்
கொண்டு வாருங்கள்.
BIKE உடன்
SAMSUNG GALAXY J2
கைத்தொலைபேசி இலவசம்.

கையிருப்பு உள்ளவரை மட்டுமே!









No. 08, 1st Cross Street, Vavuniya.
T.P. : 024 222 8383



EL BETHEL COLLEGE
PRE SCHOOL | VOCATIONAL TRAINING | ENGLISH LANGUAGE TRAINING
INTERNATIONAL SCHOOL
NAVATKULI JUNCTION, KAITHADY, JAFFNA.

ENGLISH MEDIUM

PRIMARY SCHOOL
British Curriculum
ஆரம்ப பள்ளி
தரம் 1- தரம் 5 வரை

முன்பள்ளி
2.5 - 5 வயது வரை
Nursery AMI syllabus
with AMI Trained Teachers

Spoken සිංහල
சிங்களம் பேசுவதற்கான குழு வகுப்புக்கள்
அனைத்து பிரிவினருக்கும்

Elocution Classes
(Age Group 5 - 12)

Spoken English
English Grammer Group Classes
(After O/L, A/L Classes)

AMI Teachers Training Centre

021 205 0963, 077 433 1841


இப்பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 10.04.2016 அன்று வெளியிடப்பட்டது